# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | பிங்கள ௵ பங்குனி௴, MARCH 1918. | சஞ்சிகை 3. No. 3.


## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters

Pages for Boys and Ladies: A speciality.


### Rates of Subscription (Post Free.)

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

### Rates of Advertisement.

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.


**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,

VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும், நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும், சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.


### தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

### விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |


**வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை**:—வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாகியில் எழுதி யிருக்கவேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபி ரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர், தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும் ஜனோபகாரி ஆபீசுக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்ட் கம்பெனி,

வேலூர், (தென்னிந்தியா.)

## The Poetic Genius of our women.

By Pandit P. K. Sreenivasachariar.

## நமது ஸ்திரீகளின் கவித்திறமை.

முற்காலத்தில் கல்விகேள்விகளிலும் நற்குண நல்லொழுக்கத்திலும் சிறந்த ஸ்த்ரீகள்பலர் இருந்தனர். அவர்களிற் பலர் பொருள்வளமிக்க கவிகளை இயற்றவும் வல்லவர்கள். அவர்களின் கற்பு, வீரம், கடைப்பிடி, உத்ஸாஹம், முதலிய குணங்கள் அவர்கள்பாடல்களில் விசேஷமாகக் காணப்படுகின்றன. அச்செய்புள்கள் பொருள் விளக்கமுற எளியவையாயிருக்கின்றன; இயற்கைகூறுதலையே பெரிதுங் கொண்டன. அவற்றுட் சிலவற்றை இங்குக் குறிப்போம்.

பொன்முடியார்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்
[கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(இதன்பொருள்):—மைந்தனைப் பெற்று வளர்த்தல் எனது முதன்மையான கடமை; கல்விகேள்விகளால் அவனைப் பெரியோனாக்குவது தகப்பனுக்குக் கடமை; அவனுக்கு வேலாயுதத்தைக் காய்ச்சியடித்துக் கூர்மையாகச் செய்துகொடுப்பது கொல்லனுக்குக் கடமை; அவனுக்குப் போர்ச்செலவை நன்னடக்கையுடன் அளிப்பது [போர்க்கு அனுப்புவது] அரசனுக்குக் கடமை; வாட்படையேந்தி யுத்தத்தில் வலிய ஆண்யானைகளை வெட்டிக் கொன்று வெற்றிபெற்றுவருதல் மைந்தனுக்குக் கடமை.

இச்செய்புளில், பகையைக் கொன்றுவரும் வெற்றிச்சிறப்பைப் பாராட்டிக் கூறிய நயமும், வீரர்க்கேயல்லாமல் அவ்வீரக்குடியிற் பிறந்த ஸ்த்ரீகளுக்கும் மிகுதியாகக் கோபமுண்டாதல் விளங்கும் சிறப்புங் காண்க. இங்ஙனம் பெண்ணொருத்தி சொன்னமை எவ்வளவு அருமை!

காவற்பெண்டு.

சிற்றில் நற்றூண் பற்றி நின்று,
'யாண்டுளனோ?' என வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேனோரும்;
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன்மாதோ போர்க்களத்தானே.

(ஒருத்தி "உன் மகன் எங்கே?" என்று கேட்டதற்கு, காவற்பெண்டு என்பாள் கூறுவாள்:—)

(இதன் பொருள்):—சின்ன வீட்டிலே நல்ல தூணைப் பிடித்துக்கொண்டுநின்று 'உன்மகன் எவ்விடத்தில் இருக்கிறான்?' என்று கேட்பாய்; என்னுடைய பிள்ளை எவ்விடத்தில் உள்ளானாலும் நான் அறியேன்; புலி இருந்து போன மலைக்குகைபோல அவனைப் பெற்ற வயிறே இது; அவன் யுத்தகளத்திலே விளங்கித் தோன்றுவான்; அவனைக் காணவிரும்பினால், அங்கே போய்ப் பார்.

புலி குடியிருந்துபோன மலைக்குகைபோல அவனுக்கு என்னிடத்தில் உறவும் அப்படிப் பட்டது என்பது கருத்து. இச்செய்புளில், வெற்றிச்சிறப்புடன், நிகரில்லாதபடி ஆண்மைத் தன்மை மேன்மேல் ஏறுகின்ற குடிப்பிறப்பொழுக்கத்தை உயர்த்திச்சொல்லும் நயங் காண்க.

ஒக்கூர் மாசாத்தியார்.

கெடுக சிந்தை; கடி(து) இவள் துணிவே;
மூதில் மகளி ராதல் தகுமே?
மேனா ளுற்ற செருவிற் (கு) இவள்தன்னை,
யானை யெறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற் (கு) இவள் கொழுநன்,

பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே ;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று [மயங்கி,
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் (து) [உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமக னல்ல (து) இல்லோள்,
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.

(ஒருஸ்த்ரீ தன் ஒரேமகனை யுத்தத்துக்கு அனுப்பியதை ஒருஸ்த்ரீ பாராட்டிச் சொல்லுகிறாள்:—)

(இதன் பொருள்):—என் சிந்தை கெடுக. இவளுடைய துணிவு கடுமையானது ; உயர் குடிப்பெண்ணாகவும் பிறக்கலாமா? முதல்நாள் நடந்த யுத்தத்தில் இவளுடைய தந்தை யானைச் சேனையைத் தாக்கி யுத்தகளத்தில் இறந்து போனான் ; நேற்று நடந்த போர்க்கு இவளுடைய கணவன் பெரியசேனையின் அணிவகுப்பைத் தொலைத்து விலக்கி, அப்பொழுது அங்கே இறந்துபோனான் ; இன்றைக்கும் யுத்த வாத்திய கோஷத்தைக் கேட்டு விருப்பமுற்று ஆவேசங்கொண்டு, தனக்கு ஒருமகனேயல்லது வேறு இல்லாதவள், வேலாயுதத்தை அவன் கையிற் கொடுத்து, தூவெண்மையான வஸ்திரத்தை எடுத்து விரித்து உடுத்து, பருந்தின் மயிர்போலிருக்கிற * செம்மை இன்னும் மாறாத குடுமியில் எண்ணெய்தடவி வாரி, 'யுத்தமுகம் நோக்கிப் போ' என்று அனுப்புவாள்.

உயர்குடிப் பெண்ணாகவும் பிறக்கலாமா? என்று இகழ்வதுபோற் புகழப்பட்ட நயங் கருதுக. இச்செய்யுளில் பெண்ணின் யுத்தப் பிரியங் கொண்டாடப்பட்டது.

ஔவையார்.

வாடு முலை ஊறிச் சுரந்தன ;
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே.

(இதன் பொருள்):—யுத்தத்தில் ஓடாத மேம்பட்ட கொள்கையையுடைய ஆண்மக்களிற் சிறந்த மைந்தனது தாய்க்கு, முன்பு வாடியிருந்த ஸ்தனங்கள் அச்செய்தி தெரிந்தவளவில் பாலூறிச் சுரக்கப்பெற்றுப் பருத்துவிட்டன.

இதில், வீரங்கருதிப் பகைவரோடு போர் செய்தற் சிறப்புக் கொண்டாடப்பட்டமையும், ஸந்தோஷத்தினாலாகிய உருக்கமும் நயம்பொருந்தக் கூறியமை காண்க.

பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.

(தன் கணவன் இறக்க அவனது பிரிவைப் பொறுக்கமாட்டாமல் அக்கினிப் பிரவேசஞ் செய்யுமுன் சொல்லியது:—)

பல்சான்றீரே ! பல்சான்றீரே !
செல்கெனச் சொல்லா (து) ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே !
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டா (து),
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் (து) அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்றி வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் ; மாதோ !
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல ; எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே.

கணவனிறந்தபின் மற்றைமகளிர் இருப்பது போல் நான் இரேனென்கிறாள்.

(இதன் பொருள்):—பல பெரியோர்களே ! பல பெரியோர்களே ! 'உன் கணவனோடு இறக்கும்படி நீ போ' என்று சொல்லாமல், அந்த மரணத்தை விட்டொழியென்று சொல்லித் தடுக்கின்ற பொல்லாத விசாரத்தையுடைய பல பெரியோர்களே ! 'அணிலின் வரிபோலும்' வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரியப்பட்ட விதைபோலிருக்கிற நல்லவெண்

* இங்கு, வேறுபொருள் கூறுமுளர்; அது தகுதியாயின் கொள்க.

மையான பரிமளமுள்ள நெய் தீண்டாமல், இலை இடையில் உள்ள, கையினால் பிழிந்துகொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுப் பிண்டத்துடனே வெண்மையான எள் அரைத்த விழுதுடனே புளிகூட்டிச் சமைக்கப்பட்ட வேளையிலை வெந்த கறியுமாகிய இவற்றை உணவாகக்கொண்டு, பருக்கைக் கற்களாலாகிய படுக்கையில் பாயுமில்லாமற் கிடக்கிற விதவை விரதத்தால் வருந்தும் ஸ்த்ரீகளில் நாம் ஒருவரல்லோம்; மயானத்தில் உண்டாக்கப்பட்ட கருமையான விறகுகளால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அருமையாயிருக்கட்டும்; நமக்கு, நம்முடைய பெரிய தோளை உடையவனாகிய கணவன் இறந்துபோய் விட்டானானால், அரும்பாக இல்லாமல் வளப்பமான இதழ் மலர்ந்திருக்கப்பெற்ற தாமரையையுடைய நீர்நிறைந்த குளிர்ந்த பெரிய குளமும் தீயும் ஒரு தன்மையானதே.

இச்செய்யுளில், கணவனைவிட்டுப் பிரியமாட்டாத தன்மை வெளிப்படுதல் காண்க.

பக்குடுக்கை நன்கணியார்.

ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி யணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் (பு) உறைப்பப்,
படைத்தோன் மன்ற அப்பண்பி லாளன் ;
இன்னா (து) அம்ம! இவ்வுலகம் ;
இனிய காண் (க)இதன் இயல்புணர்ந்தோரே.

(இதன் பொருள்):—ஒருமனையிலே சாவுக்கான பறை ஒலிக்க, ஒரு மனையிலே கல்யாணத்திற்குக் கொட்டும் மிகவும் குளிர்ந்த முழவு என்னும் வாத்தியத்தின் ஓசை மிக ஒலிக்க, கணவரோடு கூடின மகளிர் புஷ்பஅலங்காரம் செய்துகொள்ள, அவரைப் பிரிந்த ஸ்த்ரீகளின் வருத்தத்தையுடைய முன்னே மையுண்ட கண்கள் நீர்பெருகித் துளிக்க, இவ்விதம் ஒத்தும் ஒவ்வாமலும், நிச்சயமாகக் குணமில்லாதவனான பிரமன் படைத்தான். இவ்வுலகத்தின் இயற்கை கொடியதாயிருக்கிறது. ஆதலால், இவ்வுலகத்தின் தன்மையை அறிந்தவர், மோக்ஷானந்தத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்து கொள்க.

இச்செய்யுளில் உலகத்தின் இயல்பு அழகாகச் சொல்லப்பட்டுள்ளமை காண்க. கடையடி,—இவ்வுலகத்தின் இயற்கையை உணர்ந்தவர் இந்தத் துன்பத்தை இனிமையாகக் காண்க வென்னும் பொருளையும் தரும்.

இங்ஙனம் அரிய கருத்துக்கள் பல அடங்கிய செய்யுள்கள் ஆயிரக்கணக்காகப் பெண்மக்களாற் பாடப்பட்டுள்ளன.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## What is Kindergarten?

By Mr. N. R. Kedari Rao, M.A., L.T.

## கிண்டர்கார்டன் என்றால் என்ன?

இந்தியாவில் இதுவரையில் பலருக்கும் கிண்டர் கார்டன் என்றால் என்ன? என்ற விஷயம் தெளிவாய் விளங்காமலிருந்தது. கணிதம், பூகோளம், சரித்திரம் முதலியவற்றைப் போலவே இதுவும் ஒருவிதமான பாடமென்றே பலரும் கருதிவந்தார்கள். ஆனால், அப்படி எண்ணுவது சரியன்று. கொஞ்சம் நாம் யோசித்துப்பார்க்கின், அது பாலர்க்குக் கல்வி கற்பிக்கும் முறைகளில் மிகவும் ச்ரேஷ்டமான தென்றே தெரியவரும்.

முன்பு சிலர், "அடியாத மாடு படியாது" என்ற வாக்கியத்தையே மனத்திற்கொண்டு, குழந்தைகள் வாசிக்காமல் வந்தால் அவர்களைத் திட்டுவதும் அடிப்பதுமாயிருந்தார்கள். குழ

ந்தைகளை அடிப்பது தகாதது என்பதைப் பெரும்பாலோர் கவனிப்பதில்லை; அடிக்காவிட்டால் குழந்தைகள் படிக்கவேமாட்டார்கள் என்று கருதிவந்தார்கள். ஆனால், இப்போதோ, குழந்தைகளை அடிப்பதைக்காட்டிலும் அவர்களுக்குச் செய்யக்கூடிய தீங்கு வேறு ஒன்றுமில்லையென்று நினைக்கின்றனர். சாதாரணமாய், ஒரு மனிதனை மற்றொருவன் அடித்தால், அவ்விருவர்க்கும் பிரியம் இருக்குமா? த்வேஷமல்லவோ உண்டாகும்! அதே மாதிரி, பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பிள்ளைகளைத் தினந்தோறும் அடித்துக்கொண்டிருந்தால், அவரைக் கண்டால் பிள்ளைகளுக்கு எப்படி பிரியம் உண்டாகும்? பிரியம் இல்லாவிடில் அவர் சொல்லும் வார்த்தைக்கு எப்படி மதிப்பு ஏற்படும்? இக்காரணம்பற்றியே இப்போது பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளை அடிக்கக்கூடாது என்ற நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. சிறுவர்கள் பிழைசெய்வது இயற்கையே; அவற்றைப் பெரியோர் பொறுப்பதே மேன்மை. இன்னும், சிறுவர்கள் பெரும்பிழை செய்தாராயினும், அவர்களை மிருதுவான வாக்கியங்களாலும், அன்பான மொழிகளாலும் திருத்தவேண்டுமேயன்றி, கோபங்கொண்டு அவர்களைக் கண்டிப்பது அறிந்தோர்க்கு அழகன்று.

இவ்விஷயத்தைப்பற்றி நாம் நன்கு ஆலோசித்தால், இன்னும் பல அபூர்வமான சங்கதிகள் நமக்குப் புலப்படும். சிறுவர்கள் பிழை செய்வது இயற்கையென்று முன்னமேயே கூறினோம். குழந்தைகள் பிழை செய்வதற்கோ அல்லது முறை தவறி நடப்பதற்கோ மூலகாரணம் என்னவென்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக: நேற்றைக்குச் சொல்லிக்கொடுத்த பாடத்தை இன்று திருப்பிக் கேட்கும்போது ஒரு குழந்தைக்குப் பதில் சொல்லத் தெரியவில்லையென்று வைத்துக் கொள்வோம். இது எப்படி உண்டாயிற்று என்று ஆராய்ந்தால், பலவிதமான காரணங்கள் நமக்குப் புலப்படும். முதலாவது, நேற்று நாம் சொல்லிக்கொடுத்த விஷயம் அவைகளுக்குத் தெரியாமலிருக்கலாம். இரண்டாவது, நேற்றையதினம் தெரிந்திருந்தாலும் இன்றைக்கு மறந்துபோயிருக்கலாம். மூன்றாவது, ஞாபகமிருந்தாலும் அச்சத்தினாலாவது, ஸங்கோசத்தினாலாவது நாம் கேட்கும்போது பதில் சொல்ல முடியாமலிருக்கலாம். இப்படிப்பட்ட காரணங்களுள் எதுவாயிருந்தாலும் சரி, அடிப்பதால் எவ்வித பிரயோஜனமாவது உண்டாகுமோ? குழந்தையை அடித்தவுடனே நேற்றைக்கே தெரியாத விஷயம் உடனே தெரிந்துபோகுமோ? அல்லது மறந்துபோன விஷயம் ஞாபகத்துக்கு வருமோ? அல்லது ஸங்கோசம் தெளியுமோ? ஒன்றும் ஆகாது. அடிப்பதால் பயமும் ஸங்கோசமும், அதிகமாகி சிறிதாவது ஞாபகத்துக்கு வந்த விஷயமும் மறந்துபோய்விடும். ஆகையால், பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் குழந்தைகளை அடிக்கவேகூடாது என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். குழந்தைகள் நெறி தவறி நடந்தால் அவைகளைத் தண்டிப்பது நன்மை என்று சிலர் எண்ணக்கூடும். குழந்தைகள் தப்பான காரியங்களைச் செய்தாலும், அவைகளை அடிப்பது உசிதமன்று. குழந்தைகளுக்குத் தாம் செய்வது தப்பு என்பது தெரியாமலிருக்கலாம்; ஆகையால், அவைகளுக்கு நாம் நன்னெறியைப் போதிக்கவேண்டுமேயன்றி, அவைகளைத் தண்டிப்பது கூடாது. ஒருதரம் சொல்லியும் அவைகள் கேட்காமலிருந்தால், மீண்டும் தப்புச் செய்யாமலிருக்கும்படி அவைகளை நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக? தாழ்வாரத்தில் தின்பண்டங்களை வைத்தால் குழந்தைகள் அவற்றை அதிகமாகச் சாப்பிட்டுவிடுவது வழக்கமே. மிதமிஞ்சிச் சாப்பிட்டதனால் உடம்பு அசௌக்கியமாய்விட்டதென்று குழந்தைகளை அடிப்பது மூடத்தனம். அத்தின்பண்டங்களைக் குழந்தைகளின் கைக்கு எட்டாமல் வைப்பதே நல்லது. இம்மாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் குழந்தைகள் தப்புச் செய்ய மார்க்கம் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்

டுமே யன்றி, அவைகள் தப்புச் செய்தபிறகு தண்டிப்பது சரியன்று.

நிற்க, ஒருவகுப்பில் பலவிதமான பிள்ளைகள் இருக்கிறார்கள். சிலர் புத்திசாலிகள். சிலர் மத்தியமான புத்தியையுடையவர்கள். சிலருக்குப் புத்தி சற்று மந்தமாயிருக்கும். இப்போது பள்ளிக்கூடங்களில் நடப்பதென்னவென்றால்: உபாத்தியாயர்கள் வகுப்பு முழுவதையும் ஒன்றாகவே பாவித்துக் கல்வி கற்பிக்கிறார்கள். இதைவிட உபாத்தியாயர்கள் ஒவ்வொரு குழந்தையையும் சமீபத்தில் வைத்துக்கொண்டு அதற்கு எது ஏற்குமோ அதைச் சரிவரச் சொல்லிக் கொடுத்தால், மிகுந்த நன்மையுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை. ஆகையால், குழந்தைகளின் புத்திக்குத் தகுந்தவாறு உபாத்தியாயர்கள் கல்வி போதிக்கவேண்டுமேயன்றி, வகுப்புக்குத் தகுந்தவாறு குழந்தைகள் கல்வி கற்பது சரியன்று என்பது நமது கொள்கை.

ஸ்வாமி விவேகாநந்தர் 'குழந்தைகளின் மனத்தில் ஒளிந்திருக்கும் அறிவை வெளிப்படுத்துவதே கல்வி கற்பித்தலின் முக்கியக் கருத்தாகும்' என்று சொல்லியிருக்கிறார். அதாவது, நமக்குத் தெரிந்த விஷயத்தையே நாம் பல நாட்கள் வரையிலும் சிந்தியாமலிருந்தால் எப்படி அது மறந்துபோகிறதோ, அப்படியே குழந்தைகளுக்கும் மறதி என்பது உண்டு. அதை விலக்கினவுடனே ஞானவொளி பிரகாசிக்கின்றது. இவ்விதம் அறிவு பிரகாசிப்பதற்கு, குழந்தைகள் போகும் வழியே நாமும் சென்று, அறிவு எப்படி உற்பத்தியாகிறது என்பதைக் கவனிக்கவேண்டுமே தவிர, நாம் சொல்லுகிறபடியே குழந்தைகள் நடக்கவேண்டும் என்று திட்டம் செய்யக்கூடாது. குழந்தைகள் உபாத்தியாயர் சொன்னபடி 'உட்கார்' என்றால் உட்காருவதும், 'நில்' என்றால நிற்பதுமாயிருந்தால், அவைகளுக்குப் புத்தி இல்லாமலேயே போய்விடும். ஒவ்வொரு விஷயத்துக்கும் உபாத்தியாயர் வந்து சொல்லிக்கொடுப்பது முடியாது. பல விஷயங்களிலும் குழந்தைகள் தங்கள் புத்தியையே உபயோகிக்கும்படி நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். 'இக்காரியத்தை எவ்விதமாய்ச் செய்யலாம்? எப்படிச் செய்தால் சிலாக்கியம்?' என்று குழந்தைகளே யோசிக்கும்படி நாம் செய்யவேண்டும். ஒருவழியாய் ஒரு காரியத்தைக் குழந்தைகள் செய்தபிறகு, 'மற்றொரு வழியாய் அதே காரியத்தைச் செய்யுங்கள்; அப்படிச் செய்தானபிறகு எது மேன்மையானது என்று யோசியுங்கள்' என்று அவைகளுக்குச் சொல்லவேண்டும். இப்படியே செய்து வந்தால், பிறகு உபாத்தியாயர் சமீபத்தில் இல்லாவிட்டாலும், தங்களுடைய புத்தியைக் கொண்டே குழந்தைகள் முன்னுக்கு வருவார்கள்.

சாதாரணமாக, குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தால், 'உனக்கு என்ன தெரியும்' என்று எல்லோரும் கேட்பது வழக்கம். 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்' இந்த இரண்டையும் தெரிந்த பையன் 'ஆத்திசூடி' மாத்திரம் தெரிந்த பையனைக்காட்டிலும் கெட்டிக்காரன் என்று பெயர். ஆனால், எவனொருவனுக்குப் புத்தி தீக்ஷண்யம் அதிகமோ அவன்தான் கெட்டிக்காரன்; புத்தியில்லாமல் பல புஸ்தகங்களை நெட்டுருச் செய்து ஒப்பிப்பதால் யாது பயன்? உலகத்தில் புத்திமானே பலவானாவான். புத்தியுள்ளவர்களுக்கே ஸகல காரியங்களும் கைகூடிக் கீர்த்தி கிடைக்கின்றது. ஆகையால், பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் குழந்தைகளின் புத்தியை அதிகரிக்கச்செய்யவேண்டுமேயன்றி, பலவித சமாசாரங்களை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது மாத்திரம் போதாது.

மேலே கூறியபடி குழந்தைகளுக்குப் புத்தி அதிகரிக்கச் செய்வதற்குப் பல வழிகள் உண்டு. புஸ்தகங்களை வாசிப்பது ஒருவகை. புஸ்தகங்களை வாசிப்போரெல்லோரும் குணத்திற் சிறந்தவர்களல்லர். ஒரு மனிதன் புத்திசாலியாயும் குணசாலியாயுமிருந்தாலும், தேகவலிமையின்றி ஸந்தோஷமாயிருக்க முடியாது. ஆகையால், பாலர்க்குக் கல்வி கற்பிப்பதென்றால், முதலா

வது அவைகளுக்குத் திடகாத்திரத்தை யுண்டாக்க வேண்டும். குழந்தைகள் திடகாத்திரமாயிருப்பதற்குச் சுயேச்சையாய் ஓடித்திரிந்து, சந்தோஷமாய் ஆடிக்குதித்துக் களைப்பாறவேண்டும். ஒரேயிடத்தில் எப்போதும் இருந்துகொண்டு கையைக்கட்டிக்கொண்டும் வாயைப் பொத்திக்கொண்டுமிருந்தால், அக்குழந்தையின் தேகம் பலமற்றுப் போய்விடும்.

இரண்டாவது, குழந்தைகளுக்கு நற்குண நற்செய்கைகளைப் போதிக்கவேண்டும். அவைகள் நன்னெறியில் வாழ்வதற்கு இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகிய இவைகளினின்றும், மற்றும் சரித்திரங்களினின்றும் கியாதிபெற்ற பெரியோர்களின் மேற்கோள்களை எடுத்துச் சொல்லவேண்டும். இவற்றைத் தவிரவும், உபாத்தியாயரே சற்குணமுள்ளவராயிருக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பொய் சொல்லக்கூடாது என்று சொன்ன உபாத்தியாயரே பொய் சொல்ல ஆரம்பித்தால், அவைகளுக்குச் சற்குணம் எப்படிப் படியும்? ஆதலால், உபாத்தியாயரே முதலில் குணத்தில் மேம்பட்டவராயிருக்கவேண்டும்.

மூன்றாவது, புஸ்தகஞானம் கற்பிப்பதில் கல்வியை எவ்வளவு சந்தோஷகரமாகச் செய்யலாமோ அவ்வளவு சந்தோஷகரமாகச் செய்ய வேண்டும்; ஏனெனில், சந்தோஷமாயிருந்தால்தான் ஊக்கத்துடன் கல்வி கற்கமுடியும். இக்காரணம்பற்றியே நவீனப்பள்ளிக்கூடங்களில் சித்திரம் வரைதல், ஸங்கீதம், பலர்சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் ஆகிய பலவற்றையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்று சொல்லப்படும் ஐந்து விஷயமான சக்திகளும் குழந்தைகளுக்கு உண்டாகும்படி பிரயத்தினம் செய்யவேண்டும். கண்ணை மூடிக்கொண்டே ஸ்பரிசத்தினால் இது பட்டு என்னும், இது பருத்தி என்று சொல்லும் திறமையும், அளவுகோல் வைத்து அளக்காமல் இது இவ்வளவு அடி நீளம், இவ்வளவு அடி அகலம் என்று சொல்லும் திறமையும், ஒரு தொனியைக் கேட்டமாத்திரத்திலேயே இது இந்த மிருகத்தின் கூச்சல் என்று சொல்லும் திறமையையும், நாசியினால் நுகருவதனாலேயே இது இந்த புஷ்பத்தின் வாசனையென்று அறியும் வகையும், இன்னும் இவைபோன்ற பலவும் குழந்தைகளுக்குத் தெரிந்திருப்பது அவசியம்.

ஆதலால், கிண்டர்கார்டன் என்பது மிகப் புதிதான விஷயம் ஒன்றுமன்று. சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயமாய்ச் சில மகான்கள் ஆராய்ச்சிசெய்து சில நவீன மார்க்கங்களை நமக்குப் போதித்திருக்கிறார்கள். அவ்வழிகளில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பிரிவுக்கே கிண்டர்கார்டன் என்று பெயர். நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால், கிண்டர்கார்டன் என்பது ஒருவிதமான பாடம் அன்று; கல்வி கற்பிக்கும் முறைகளில் ச்ரேஷ்டமான ஒரு முறையேயாம்.

இம்முறையின் முக்கியமான கொள்கைகளை இதுவரை சுருங்கச் சொன்னோம். இனி வரும் அத்தியாயங்களில் இம்முறையின்படி வாசகம், கணிதம், சரித்திரம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களைப் பாலர்க்கு எப்படி கற்பிப்பது என்பதை விஸ்தாரமாய்க் கூறுவோம்.

என். ஆர். கேதாரி ராவ், எம்.ஏ., எல்.டி.

---


## குகப்பெருமாள்.

இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் உள்ள அயோத்தியா காண்டத்தில் அடங்கிய ‘கங்கைப்படலம்’ குகப்படலம் என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்; சிறுவர் சிறுமியர் ஆதி எல்லோரும் படித்து சந்தோஷமடையும்படி இனிய எளிய வசன நடையில் வேலூர் ஊர்ஹீஸ் காலெஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் பு. க ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 3.

தபாற் செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

வேலூர், (தென்னிந்தியா.)

# Bal Gangadhar Tilak.

## பால கங்காதர திலகர்.

பூமாதேவியின் முகதிலகம்போன்ற நமது பால கங்காதர திலகர் மகாராஷ்டிர தேசத்தில் இரத்தினகிரி என்னும் ஊரில் 1856-ம் வருஷம் ஜூலை மாதம் 23ந் தேதி ஜனனமானார். இவருடைய தந்தையின் பெயர் கங்காதர இராமசந்திர திலகர்; வித்தியா இலாகாவில் உதவி பரிசோதகராயும், சமஸ்கிருத வித்வானாகவுமிருந்தவர். பால கங்காதர திலகர் சிறுபிராயத்திலேயே கணிதசாஸ்திர நிபுணரெனப் பெயர் பெற்றார். தமக்குத் தெரிந்த விஷயங்களை உடனுக்குடனே ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்ற அவா இவருக்கு ஆதி முதற்கொண்டே உண்டு. இவருடைய தந்தை 1872-ம் வருஷம் காலகதியடைந்து விட்டதனால், தந்தையின்பிரிவைத் தாங்கமாட்டாமல் மனங்குன்றி, அவரது பெயரை விளக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் முன்னிலும் அதிகமாகப் படிக்கத்தொடங்கினார். தமது இருபதாம்பிராயத்தில் சர்வகலாசபைப்பட்டம் பெற்று, 1879-ம் வருஷத்தில் சட்டபரீக்ஷையிலும் தேறினார். பிறகு, காலஞ்சென்ற அகர்கர் என்பவருடன் நேசம்பூண்டு இருவருமாகத் தாய்நாட்டிற்குச் சேவைசெய்யத் தொடங்கினர். இதன்பின்பு, இன்னும் சில நண்பர்கள் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள்.



பால கங்காதர திலகர்.

அக்காலத்தில் பூனாநகரத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்களின் ஆதினத்திலும் கவர்ன்மெண்டாரின் ஆதினத்திலுமே பள்ளிக்கூடங்கள் பெரும்பாலுமிருந்தபடியால், நமது தலைவர்கள், ஜாதீயமுறையில் கல்வியைப் பரவச்செய்ய எண்ணங்கொண்டு, 1880-ம் வருஷத்தில் ஒரு கலாசாலையை ஸ்தாபித்தனர்.

நாட்டின் பொதுவிஷயங்களைப் பாமரர்களும் அறிந்துகொள்ளும்பொருட்டு மகாராஷ்டிர பாஷையில் "கேஸரி" என்ற பத்திரிகையையும், பொதுஜனங்களின் அபிப்பிராயங்களையும், லட்சியங்களையும் இராஜாங்கத்தார் அறிந்துகொள்ளும் பொருட்டு ஆங்கில பாஷையில் "மராட்டா" என்ற பத்திரிகையையும் இவர்கள் பிரசுரித்துவந்தார்கள். இப்பத்திரிகைகள் நாளுக்கு நாள் நன்கு அபிவிருத்தியடைந்து வந்தன. இவை கோலப்பூர் மகாராஜாவை ஆதரித்துச் சில கண்டனங்கள் எழுதியதன்பலனாக ஸ்ரீமான் அகர்கரும் திலகரும் நான்குமாத தண்டனையை யடைந்தார்கள். பிறகு, 1888-ம் வருஷம் முதற்கொண்டு திலகர் அவ்விருபத்திரிகைகளையும் தாமே எடுத்துக்கொண்டு நடத்திவந்தார்.

திலகர் வானசாஸ்திரத்தில் நுண்ணிய அறிவையுடையவர். வேதத்தின் தொன்மையைப் பலவிதமாக இவர் ஆராய்ச்சிசெய்து "ஓரியன்" என்னும் வியாசத்தைச் சீமைக்கு அனுப்பினார். இவ்வியாசத்தைக் கண்ணுற்ற மாக்ஸ் முல்லர், வெப்பர் முதலான பல ஆங்கிலேயப் புலவர்கள் இவரை மிகவும் கொண்டாடினார்கள். இதனால் இவருடைய கீர்த்தி வெளிநாடு எங்கும் பரவியது.

இவர் பொதுஜனங்களின் க்ஷேமத்தையே கோரி உழைப்பவராதலால், பம்பாய் மாகாண சங்கத்திற்கு ஐந்துவருஷகாலம் காரியதரிசியாகவும், காங்கிரஸ் மகாஸபையின் தக்ஷிணக் கமிட்டிக்குக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டுப் பல அரிய காரியங்களைச் செய்தார். பம்பாய் சட்ட சபையில் இருமுறை ஜனங்களாலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொது விஷயங்களில் கவனஞ்செலுத்திவந்தார். பம்பாய் சர்வகலா சங்கத்தில் ஒரு அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1895-ம் வருஷத்தில் பூனா நகர முனிசிபாலிடியில் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டு ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். அந்தவருஷம் பூனாநகரில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சத்தில் ஜனங்களின் கஷ்டங்களைச் சிறிதும் அவர் சகியாதவராய், அவர்களுக்குப் பல துறைகளிலும் உதவிசெய்யத் தீர்மானித்து, ஆங்காங்குத் தானியக்களஞ்சியங்களை ஏற்படுத்தினார். இதனால், ஜனங்களின் கஷ்டம் ஒருவாறு நீங்கியது. இக்கொடிய பஞ்சம் சற்றுத் தணிவதற்குமுன்னமே ப்ளேக் வியாதி பூனாநகரைச் சூறையாடத் தொடங்கிற்று; ஏராளமான ஜனங்கள் நகரத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள்; பெரும்பாலான ஜனங்கள் நோய்க்கு இரையானார்கள். இச்சமயத்தில் திலகர் நகரைவிட்டு நீங்கிப் போகாமல், ஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். சில ஆங்கில வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கும் ஜனங்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினாலும், ஏற்கெனவே ஜனங்களின் மனம் கொதிப்படைந்திருந்ததனாலும் சில துன்மார்க்கர்கள் இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைக் கொலைசெய்தனர். அச்சமயம் திலகர் பொது ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி உழைத்து வந்ததனால், இவர்மேல் இராஜத்துவேஷப் பழி சுமத்தப்பட்டு 1897-ம் வருஷம் 18 மாதம் கடுங்காவல் தண்டனை யடைந்தார். ஆனால், இவருடைய வித்தியா விசேஷத்தை அறிந்திருந்த மாக்ஸ்முல்லரும், உல்லியம் ஹண்டரும், விக்டோரியா மஹாராணியாருக்கு அறிவித்து விடுதலை செய்வித்தார்கள்.

பால கங்காதர திலகர் சாமானிய மனித சரீரத்தைக் கொண்டுள்ளபோதிலும், ஆன்ம சக்தியைக் கொண்டவர். இவருடைய தீவிர மனவெழுச்சியையும், தேசபக்தியையும், சமத்துவ உணர்ச்சியையும் அறியாத சில ஆங்கில உத்தியோகஸ்தர்கள், இவரைச் சதியோசனைக் காரனென்று குற்றஞ்சுமத்த, மறுபடியும் 1908-ம் வருஷம் இராஜ நிந்தனைக்காக 6-வருஷம் தண்டிக்கப்பட்டார். எதுவரினும் நொந்திடாத மனத்தினராய்த் தளராத சிந்தையும் பிரியாத ஆத்மவிசாரமும் கொண்ட இவர், கீதாரஹஸ்யமென்னும் சிறந்த கிரந்தத்தை மராட்டிய பாஷையில் எழுதினார்.

இவர் இத்தள்ளாத வயதிலும் பதினாறு வயது குமாரனைப்போல தேசநன்மைக்காக உழைத்துவருகிறார். நாட்டின் அபிவிருத்தியைக் கருதி திக்விஜயம் செய்துவந்த இவரை, பஞ்சாப் மாகாணத்து கவர்னரும் டெல்லி பிராந்தியத்து கமிஷனரும் தத்தம் மாகாணங்களுக்கு வரக்கூடாதெனக் கட்டளையொன்றைப் பிறப்பித்தார்கள்.

இவருடைய சஷ்டிப்பூர்த்தி தினத்தன்று ஜனங்கள் இவருக்கு ஒரு லட்சம் ரூபாய் காணிக்கையாகக் கொடுத்தார்கள். அப்போது சில உத்தியோகஸ்தர்கள், இவர் செய்த சில பிரசங்கங்கள் இராஜநிந்தனையெனக்கொண்டு இவரை நன்னடைக்கைக்கு 40,000 ரூபாய் ஜாமீன் கேட்டார்கள். ஆனால், இது பம்பாய் கோர்ட்டில் தள்ளப்பட்டுப்போய்விட்டது.

ஆதிமுதல் இதுவரையிலும் பொதுஜனங்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவந்த நமது திலகர், இன்னும் பல காலம் பொதுநலத்திற்காக உழைக்கப் போதிய ஆயுளையும் தேகவன்மையையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## Sita's Exile.

BY MR. P. K. SREENIVASACHARIAR,

## சீதை வனம் புகுந்த சரிதம்.

(47-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவனது சொல்லாகிய எரிகிற நெருப்பிற் காய்ந்த நாராசம் சீதையின் இருசெவிகளிலும் நுழைந்தவளவில், அவள் தளர்ந்து தரையில் விழுந்துவிட்டாள். சீதை கொடிய அத்துயரத்தைப் பொறுக்கமாட்டாமல் கீழ்விழுந்து புரள்வாள்; எழுந்து மீளவும் விழுவாள்; இருகைகளாலும் வயிற்றை மோதிக்கொள்வாள்; கண்கள் மலையருவிபோல இடைவிடாது நீரைப் பெருக்க, ஆழ்ந்த துயரக்கடல்வெள்ளத்தில் அகப்பட்டு நிலைகுலைவாள். தேவர்கள் அது கண்டு சீதை இறந்துவிட்டாளென்று எண்ணிக் கலங்கினார்கள். இலக்குமணன் அவளது அவத்தையைக் கண்டு அலறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டான்; இன்னும் பாடுகள் மிகப் பலமேன்மேல் உண்டாகவேண்டியிருத்தலால், மன்னர்மன்னனாகிய இராமபிரானுடைய தருமபத்தினியான சீதை, அரிதின் உயிர்பெற்று, மூர்ச்சைதெளிந்து, இருகண்களும் விழித்து வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினாள்:—

"என் அன்னையே! என் தந்தையே! அரிய உயிர்த்தோழியரே! தனக்கு நேரில்லாத வெற்றிபொருந்திய இராமபிரான் என்விஷயமாகச் செய்த கொடிய இச்செயலை நீங்கள் கேள்விப்படும்பொழுது என்னபாடுபடுவீர்களோ? என்னே! இவ்வுலகத்தில் நானே இங்கு இத்துன்பங்களைப் படுவேன்! இவ்வுலகத்தில் அனைவரும் பழியாலே பழிமறைத்து நெய்யாலே நெருப்பவிக்க இதுகாறும் எங்கும் கண்டறியேன்; இராமபிரானிடத்தில் அதுகண்டேன். இச்சொல் தமது காதிற் பட்டால், என் மாமியார் உயிர்வாழார். கன்னெஞ்சராய் என்னைக் காட்டில் விடச்சொன்னவரோ, வன்னெஞ்சராய் அதற்கு இசைந்து வனத்தில் விடவந்தவரோ, மகளிர் நகைபுரிய இன்னம் சாகாதிருந்த யானோ,* இம்மூவரில் வன்மனமுடையவர் யார்? மகளிர் என்னைப் பழித்துப் பரிகசிப்பார்களோ? அன்றி, இராகவன் வன்னெஞ்சனென்று சொல்வார்களோ? உலகத்திற் பிறந்த பிராணிவர்க்கங்கள்யாவும் பின்பு இறந்தேயொழிகின்றன. ஆயினும், இவ்வுலகத்தில் பெண்ணாய்ப்பிறந்தவர்களில் யான்பட்ட பெருந்துயரத்தைப் பட்டவர் யார்? கனிந்த மனத்தையுடைய ஸ்ரீராமன், உலகில் ஜனங்கள் சொல்லும் பழிக்கு அஞ்சி, அவனையன்றி வேறுகதியில்லாதவளான நான் தனியே கதறும்படி, தனிக்காட்டில் தம்பியைக்கொண்டு விடுவித்தான். சூரியனாற் பெற்று வளர்க்கப்பட்டவனும், பழிக்கத்தக்க குணஞ்செயல் இல்லாதவனுமான மனுவினது குலத்திற் பிறந்தவர்கட்கு இவையேயோ மனுநெறி? கைகேயியின் மனம் மாறிவிடும்படி கற்பித்த கூனியைப்போல, ஸ்திரீகளோ, புருஷர்களோ, யாரோ, இவ்வுலகில் இப்பொழுது என்காதலனை இக்காரியத்தைச் செய்வாயென்று மனத்திற் பதியும்படி கற்பித்தார்கள்! ஐயோ!"

இத்தன்மையான பலவார்த்தைகளை மேன்மேற்சொல்லி, இருகண்களினின்று நீர் ஆறாய்ப் பெருக, மலைகளும் மரங்களும் அங்குள்ள கொடிய மிருகங்களும் கலங்கிநின்று உருகவும், வனதேவதை நெஞ்சழிந்து கண்ணீர் சொரியும்படியும் சீதை மனந்தவித்துக் கதறினாள். அப்பொழுது, இலக்குமணனும் தான் ஆழ்ந்த துயரக்கடலை ஒருவாறு கடந்து கரையேறி, மனவருத்தம்மிக்க சீதைக்கு, 'உத்தமியே யான் உரைப்பதைக் கேள்' என்று சொல்லிப் பின்வருமாறு சொல்லலானான்:—

"வலிய வினையால் விளைகிற பயனை வெல்லுதல் தேவர்களுக்கும் அரிதாம். அர்ஜனமிரு

க்க, நிலவுலகத்திலுள்ள மனிதர்களில் அவ்வினைப்பயனை வெல்லவல்லவர் யார்? உலகமுழுவதுக்கும் ஒருதனித்தலைவனாய் ஒப்பற்ற தனது ஆஜ்ஞாசக்கரத்தை எங்கும் தடையறச் செலுத்தி, மலைபோலும் மதயானையின்மீது ஏறி, மதிமண்டலம்போன்ற ஒற்றைவெண்கொற்றக்குடையின் நிழற்கீழ் அரசுவீற்றிருந்து வாழ்ந்த நளசக்கரவர்த்தி, மலைபோன்ற மிகப்பெரிய வினைப்பயனால், தனது மேலான நிலைமை கெட்டு, தன் அழகிய மனைவியைப் பெரிய கானகத்தின் இடையிலே கைவிட்டு, தான் மடையனாய் வருந்தினனே! தனக்கு நேரில்லாத அரிச்சந்திரமகாராசன், முன்செய்த வினையால், தன் மைந்தனையும் மெல்லிய இடையையுடைய மெல்லியலாகிய தன் மனைவியையும் விட்டு, புலால்நாற்றத்தையுடைய பறையனுக்கு ஆளாகித் தான் மயானங் காவல் செய்து, தனது மேன்மைநிலைமையினின்று மாறிக் கிழ்மையுற்றான். விதியின் கொடுமை எத்தன்மையது! நீ, முற்பிறப்பில் முதலிற் செய்த நல்வினையினால் இராமபிரானைக் கணவனாகப்பெற்று, பின்செய்த தீவினையினால் இங்ஙனம் நீ அவனைப் பிரிவுற்றாய். புண்ணியபாபங்களாகிய இருவகைவினைகள் முறையே என்ன நன்மைதீமைகளைத்தான் விளைக்கமாட்டா? இத்தகைய இடரை நீ அடையாதபடி நீ செய்ய வேண்டிய செய்கைமுழுதும் பெரிய தவமேயாம்; அதனைச் செய். மிக்க தவத்தையுடைய முனிவர்களது திருவடிகளை விரும்பி வணங்கி வழிபட்டு, வேதசாஸ்திரங்களிற் கூறிய விதிமுறையே அவர்கள் சொன்ன சன்மார்க்க முறை வழுவாது ஒழுகி, விரதங்களை அநுஷ்டித்து, உபவசித்து, அவ்விடத்திலே உனது காதலனை எப்பொழுதும் கருத்தில் வைத்துச் சிறந்த தவத்தைச் செய்வாயாக. இதுவே உனக்குச் செய்யத்தக்க தொழில்.”

அவ்வாறு சொன்ன இளையபெருமானுக்குச் சீதை கூறுவாள்:—“உன் தமையனாரை நிழல்போல எப்பொழுதும் விட்டுப்பிரியாதவளல்லளோ நான்? முன்பு அப்பெருமானும் நானும் சேர்ந்து சென்று திருவடிவணங்கப்பெற்ற அரிய முனிவர்கள், கணவனுடனன்றித் தனியே சென்று அடிபணியும் என்னை நோக்கி, ‘உனது காதலன் இன்று உன்னை விட்டுப் பிரிந்த காரணந்தான் என்ன? நீ சொல்’ என்று வினவும்பொழுது, யான் அவர்களுக்கு என்ன உரைப்பேன்?’ என்று, பின்னும் கூறுவாள்:—‘பெரிய உலகமுற்றும் தனதாக உடையவனான இராமபிரானது பிழையினால் நேர்ந்தன அல்ல; பூமியிலுள்ள சனங்களின் குற்றத்தினால் நேர்ந்தனவும் அல்ல; என்னுடைய வினையாலேயே இச்செயல்கள் விளைந்தன’ என்று சொல்லி, மீட்டும், ‘இளையபெருமானே! உனது தமையனார்க்கு இன்று எனது நிலைமையை உணர்த்து’ என்று உரைத்தாள்.

மிக்க வலிமையுடையவனான இலக்குமணன், தனது இருகண்களும் நீரைச் சொரிய, மனமயங்கி, ‘வாய்விட்டுக் கதறுதலுடனே இன்று இந்த உரையைக் கேட்க என்ன பாவஞ்செய்தேனோ?’ என்று பரிதவித்து, கொடிய துன்பத்துடனே, மிக்க துன்பத்தையுடையவளான பிராட்டியை நோக்கி, இச்சொற்களைச் சொல்லலானான்:—‘வெதும்பிய மனத்தையுடையவளே! பரிசுத்தகுணமுடையவளே! உன் கணவன் உன்னைக் கைப்பிடித்த அன்றுமுதல் இன்றளவும், உன்னுடைய திருவடிகளைப் பணிந்துநின்றாலும், உனது திருமேனியைக் கண்டறியேன். இன்றுதான் உன்னைக் காணவல்லேனோ?’ என்று உரைத்தான். இவ்வாறு இலக்குமணன் சொல்லி, பிராட்டிக்கு இனி வரும் துயரத்தைக்குறித்துச் சிந்தித்து, அவளது தாமரைமலர்போலுந் திருவடிகளைப் பணிந்து, கங்கையென்னும் பெருநதியைக் கடந்து, அவளைப் பின்பார்த்துப் பின்பார்த்து, கொடிய துயரத்தால் விம்மிவிம்மி அழுபவனாய் அயோத்திநகர்நோக்கிப் போனான்.

சானகி, ‘இந்த என் மைத்துனனார் இங்ஙனம் இங்கே என்னைத் தனியே விட்டிட்டுப்

போயேவிடுவாரோ? அல்லது, மீண்டும் ஒருகால் திரும்பிவருவாரோ?' என்று எண்ணி, தான் வைத்தகண்வாங்காமல் பார்த்துக்கொண்டேயிருந்து, இளையபெருமாள் நெடுந்தூரம் சென்றுவிட்டபின்பு, 'தேரையோ யான் காண்கிறேனில்லை; இளையோனும் போய் மறைந்துவிட்டான். என்னை அறவே கைவிட்டார்கள்?' என்று எண்ணி, பெருங்குரலிட்டுக் கதறத்தொடங்கினாள்:—

"இலங்கையிலே நெடுங்காலம் பெரிய சிறையிலே இருந்து கதறியழுது நான்பட்ட சிறுமைகளும் துன்பங்களும் போதாமல், பூமியிலே பிரசித்தமாக விளங்குகிற பழியைப் பூட்டிக் கானகத்தில் என்னைத் தனியே விடுவித்து, விலகவொண்ணாத் துயரத்தை விளைத்த என்விதியே! ஐயோ! விதியே! ஐயோ! குற்றம்மிக்க பழியைக் கற்பித்து, அதனால், இப்பிறப்பில் என்னையொழிய வேறுமாதொருத்தியை என்மனத்தாலும் தொடேனென்று வரந்தந்த காதலனை மனங்கலக்கி என்னைக் காட்டில் விடுவித்து மனவேதனைவிளைத்த என் விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தயைதாக்ஷிணியமில்லாமையால் கண்ணில்லாதவனென்று சொல்லத்தக்க இராமன் என்னைக் காட்டில் விட்டிட, அதனைப் பூலோகத்திலுள்ள ஜனங்கள் கண்டிருந்து, மிக்க கொடுமையோடு வாய்திறந்து மானமில்லாத ஒழுக்கங்கெட்டவளென்று உரைத்துப் பழிதூற்றும்படி பண்ணுவித்தாய். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த தேவர்கட்கும் விலக்குதற்குஅரிய விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தாசரதியாரது மனத்தை, அன்பார்ந்த நெருங்கிய உற்றாரது உரையை என்றும் கேளாதவகை கலக்கி, இடைவிடாது தீமை நேர்தற்குக் காரணமான கொடிய பாவத்தையுடையளான எனக்கு ஒருநாளும் மீண்டுவாராதிருக்கும்படியான வனவாசத்தைக் தந்த என் விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தகுதியமைந்த கணவன் வெறுத்து ஒருத்தியைக் கைவிட்டகன்றானாயின், அவளைப் புக்ககத்தாரெல்லோரும் ஏற்றுக்கொள்ளாமல் கைவிடுவார்கள். அவள் பிறந்தகத்தார்களும் ஏற்றுக்கொண்டு போற்றமாட்டார்கள். அன்னியர்கள் அக்கணமே எந்தப்பழியைவேண்டுமானாலும் அவள்மேல் இடுவார்கள். ஆதலால், அங்ஙனம் கணவனால் கைவிடப்பட்டவளாகிய, தொலைத்தற்குஅரிய பாவத்தைச் செய்துள்ளவளான யான், போய்ச்சேர்தற்குச் சிறந்த ஓரிடத்தையுங் காண்கிறேனில்லை. என்விதியே! ஐயோ! விதியே! ஐயோ!"

இத்தகைய பலவார்த்தைகளையும் மேன்மேற்சொல்லித் துயரப்படுபவளான பிராட்டி, 'இத்துயரம் தீரும்படி எனது உயிர்தானே போய்விடமாட்டாதோ?' என்றுசொல்லிக் கதறுகிற அக்காலத்தில், அக்கினியினும் அதிபரிசுத்தரான வால்மீகிமுனிவரது சிஷ்யர்கள், அச்சீதை அழும் ஒலியின்வழியாக வந்து அவளருகிற் சேர்ந்தார்கள். அவர்கள் அழுமவளைக் கண்டு இரங்கி, விரைவாகச்சென்று அவ்வால்மீகிமகாமுனிவரை அடுத்து, அவரைத் தொழுது செய்திசொல்வார்கள்:—

"அருந்தவனே! தேவலோகத்தினின்று வழுவியவளாய்க் கீழ்விழுந்தவளோ? அன்றி, பூலோகத்திலேயே உள்ளவள்தானோ? சித்திரத்தில் எழுதுதற்குஅரிய மிகஅழகிய திருமேனியையுடையவள் யாரென்று அறியோம். ஒருவருமில்லாக் காட்டிலே சோகம்நிறைந்த மனமுடையவளான ஒருபெண், ஒருதுணையுமின்றித் தெய்வமே துணையாகி, இருகண்களினின்று நீர் நதிபோற் பெருகக் கீழ்விழுந்து அழுகின்றாள். அவளுக்கு அருள்புரிதல் உனக்கு அடுக்கும்."

அம்முனிவர், அதுகேட்டவுடனே, அச்சீடர்களுடனே புறப்பட்டு, சீதையிருக்கின்ற அங்குப் போய்ச்சேர்ந்து, அழுகை ஓயாதபடி நெஞ்சில்தங்கிய சோகம் ஆறும்படி அப்பிராட்டியைத் தேற்றுபவராய், 'நீ இங்கிருந்து சோகித்துப் பயனென்ன? துக்கித்தலை விட்டு,

மகளே! யான் சொல்வதைக் கேள்' என்று சொல்லி, மற்றும் சொல்லத்தொடங்கினர்:—"குற்றமற்றவனை இராமபிரானது தேவி நீயென்றும், குற்றமில்லாதவள் நீயென்றும், சனகமகாராசனது சிறந்த மகள் நீயென்றும் யோகதிருஷ்டியினல் நான் உணர்ந்தேன். தகுதியையுடையவளான உன்னை, அவ்விராமன் காட்டில் விட்டானல்லன்; என்னிடத்திலேயே விட்டானென்று எண்ணிக்கொள். நாங்கள் வசிக்கிற இடத்திற்கு எம்மோடும் வருவாய். எங்களுடைய ஆச்சிரமத்தின் எல்லையாகிய இவ்விடத்தில், அளவில்லாத மங்கையர் தவவேடத்தைத் தாங்கிச் சிறந்த தவத்தைச் செய்பவர்கள் உண்டு. அங்கு அவர்கள் உன்னைக் கண்டால், அகம் மிகமகிழ்ந்து, உடனே தங்கள் ஆச்சிரமத்துக்கு உன்னை அழைத்துக் கொண்டுபோய் ஆதரித்துப் பாதுகாப்பார்கள். நீ தளர்ச்சியுருதே."

வால்மீகிமகாமுனிவர் இவ்வாறு சொல்ல, சீதை அதுகேட்டுச் சிறிது ஆறுதலுற்று, அங்கு அப்பொழுது, அல்லலகற்றும் அம்முனிவனது அடியிணையை வணங்கிநின்ருள். அம்முனிவர் பிராட்டியை உடனே அழைத்துக் கொண்டு, வைதிகாக்கினியின் ஓமப்புகை மாருத தமது பர்ணசாலைக்கு வந்துசேர்ந்தார்.

சீதையைக் கண்ட மாதர்கள், தரித்திராயுள்ளவர்கள் பெருஞ்செல்வத்தைப் பெற்ருற்போல மிக்கமகிழ்ச்சியுற்று, அவளது வடிவத்தைக் கண்டு, 'குற்றமற்ற மனத்தினுற் சிறந்த திருமகள் இவள்தானே?' என்பவர்களும், 'மெல்லியலாகிய இவளுக்கு உள்ளத்தில் வேதனை உள்ளது' என்பவர்களும், 'தாங்குதற்குஅரிய சினத்தினல் தேவர்கள் சபிக்க, அதனல் நிலைகுலைந்து கீழே விழுந்துவிட்ட தேவமாதோ இவள்?' என்பவர்களுமாயினர். அங்கு அப்பொழுது, அத்தவப்பெண்டிர் இவ்வண்ணம் ஐயமுறுங்கால், 'வால்மீகிமகாமுனிவர், 'இங்கு வந்துள்ள இவளது பிறப்பையும், பெயரையும், இவள்கணவனது பெயரையும் நீங்கள் கேளுங்கள்' என்றுசொல்லி, அவற்றை அவர்கட்குக் கூறுவார்:—

"வைவஸ்வதமனுவினது குலம் விளக்கமுறும்படி அதில் அவதரித்து, கடலை மலைகளைக்கொண்டு அணைகட்டிக் கடந்து, கோதண்டமென்னும் தனது வில்லைக்கொண்டு இலங்கை நகரத்திலுள்ள அரக்கரை அழித்த தசரதசக்கரவர்த்திகுமாரனை ஸ்ரீராமபிரானது தரும பத்தினி இவள்; ஜனகமஹாராஜன் பெற்ற பரிசுத்தையான பெண்மணி; இவளது பெயர் சீதை; ஒருகாரணம்பற்றித் தன் கணவன் துறந்திட, இங்கு வந்துசேர்ந்தாள்."

வால்மீகிமகாமுனிவன் அங்கு இங்ஙனம் உரைக்க, அதுகேட்டு மங்கையரனைவரும் மகிழ்வுற்றுச் சீதையைப் போற்றினர்.

இதுநிற்க. அங்கு இளையபெருமாள் சுமந்திரனேடு அயோத்திநகரடைந்து, இரகுநாதனைப் பணிந்து, அவனது ஆணையின்படி தான் செய்ததை உரைத்தனன். அப்போது, இரகுவீரன், நாட்டிலுள்ள ஜனங்கள் சீதைவிஷயமாகச் சொன்ன பழியைக் கேட்டு வேதனைப்பட்ட அன்றையினும் மிகவும் வேதனைப்பட்டான். அப்பொழுது, இலக்குமணன், 'அதி, பழி இரண்டையும் தாம் கேட்டபடியே சொல்லும் உலகத்தாரையும் வெறுக்கத்தகாது; அவ்வுலகத்தாரோடு பொருந்தியொழுகும் மதியையும் வெறுக்கத்தகாது; அவ்வாறே, ஒழுக்கத்திற் சிறந்தவளான சானகியையும் வெறுக்கத் தகாது; அதிகுணவதியாய் அக்கினியினும் பரிசுத்தியுடையவளான அச்சீதையையும் உன்னையும் விதித்த விதியையே வெறுக்கத் தகும்' என்று தேற்றவகூற, இராமபிரான் ஒருவாறு தேறுதலடைந்தான்.

முற்றிற்று.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

# Female Education.

## பெண்கல்வி.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஜாலண்டர் என்னும் நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கன்னியா மஹாவித்தியாலயத்தின் வருஷதினக் கொண்டாட்டம் இந்த மாதம் நடைபெற்றது. அப்பொழுது, ஸ்ரீமதி ஸரோஜினிநாயுடு அக்கிராஸனம் வகித்தார். அவர் தமது பிரசங்கத்தில், பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசியதன் சில முக்கிய அம்சங்களை இங்கு எழுதுகிறோம்.

அநேகம்பேர்கள் பெண் கல்வியின் அபிவிருத்திக்கு ஒரு பெருந்தடையாயிருந்துவருவது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. பெண்கல்வி அபிவிருத்தி விஷயமாய் உழைப்பவர்களை எவ்வளவோ பேர்கள் குறைகூறி வருகிறார்கள். இவ்விஷயமானது எனக்கு மனவருத்தத்தைத் தருகின்றது. பெண் கல்வி ஏற்பட்டால், பெண்களின் அடக்கம் மரியாதை முதலான நற்குணங்கள் போய்விடுமென்று சிலர் எண்ணுகிறார்கள்; அவர்கள் அப்படி எண்ணுவது தவறு. அப்படிப்பட்டவர்கள் தங்கள் பழைய சாஸ்திரங்களையும், சரித்திரங்களையும் அறியாதவர்களென்றே நாம் கருதவேண்டும். ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய தைரியமானது, இந்திய ஸ்திரீகளுக்குப் பரம்பரையா யிருக்கின்றது. முன்காலத்திலிருந்த ஸாவித்திரி முதலான ஸ்திரீகளைக் கவனியுங்கள். ஸாவித்திரி தன் கணவனது உயிரை யமனிடமிருந்து கேட்கவில்லையா? ஆதலால், இப்போதிருக்கும் நமது ஸ்திரீகளும் பழைய கால ஸ்திரீகளுக்கிருந்த கொள்கைகளை உயிர்ப்பிக்கவேண்டும்.



ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு.

இந்திய ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்பது புதிதன்று. பண்டைக்கால ஸ்திரீகளைக் கவனியுங்கள். கார்க்கி, மயித்ரீ, லீலாவதி முதலானவர்கள் கல்விப் பேற்றைப் பெற்றிருந்தார்களல்லவா? ஆண்மைத்தனத்திலும் சந்திப்பீபி, அகல்யாபாய் முதலானவர்கள் பேர்பெற்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? முற்கால ஸ்திரீகளும், தமது புருஷர்களோடு நின்று போர்புரிந்திருக்கிறார்கள். இராமாயணம், மகாபாரதம் முதலியனவற்றைப்பார்த்தால், ஸ்திரீகளும் புருஷர்களோடு சேர்ந்து எல்லாக்காரியங்களிலும் உதவி புரிந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும். இப்போது நமது தலைவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாரைப் பல சுதந்திரங்களைக் கேட்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றிச் சற்றும் கவனிப்பதில்லை. எப்படி ஒரு வண்டியானது ஒரே சக்கரத்தினால் ஓடமுடியாதோ, அப்படியே ஒரேமனிதனால் தேசமுன்னேற்றத்திற்கான விஷயங்களைக் கவனிக்கமுடியாது. ஆகையால், எக்காரியத்தையும் முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்றால், ஸ்திரீகளும் புருஷர்களும் ஒத்துழைக்கவேண்டும்.

ஸ்திரீகளுடைய கடமையானது சமையல் செய்வதும், குழந்தைகளைத் தொட்டிலில் விட்டு ஆட்டுவதுந்தான் என்று நாம் எண்ணக்கூடாது. அவர்களுக்குக் கல்வி கொடுப்பதனால், அவர்கள் புத்தி வன்மைப்பெறுவதோடு, தத்தம் கடமைகளையும், பொறுப்புக்களையும் நன்கு உணருவார்கள். ஐரோப்பாவில் பெண்கள் கல்விகற்பிக்கப்பட வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டபோது, சிலர் அதை ஆக்ஷேபித்தார்கள்; ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்றும், அவர்கள் கல்வி கற்றுவிட்டால் வீட்டுக்காரியங்களையும் குழந்தைகளைப் பராமரிப்பதையும் விட்டுவிட்டுக் காலேஜ்களில் படிக்கத்தொடங்கி, புருஷர்கள் செய்யக்கூடிய காரியங்களைத் தாமே செய்துவிடுவார்களென்றும் சொன்னார்கள். ஆனால், ஸ்திரீகள் இவ்விஷயத்தில் பெருமுயற்சி செய்து தங்கள் காரியத்தில் சித்தி பெற்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்திராவிட்டால், இங்கிலாந்தில் இப்போது ஸகல காரியங்களையும் ஸ்திரீகளே கவனிப்பது கஷ்டமாயிருந்திருக்கும்.

ஜப்பான், சீனா முதலான தேசங்களிலும் பெண்கல்வி உணர்ச்சியானது பரவ, அதன்பலனாக ஸ்திரீகளுக்கென்று பல சர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்திரீகள் கல்விகற்பதால், அவர்களுக்கு அடக்கமும் தெய்வபக்தியும் அவசியம் ஏற்படுகின்றதென்பதை மீண்டும் இங்குக் கூறுகிறேன். நமது தேசத்தில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும், இன்னும் இதர ஜாதியார்களுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று பலர் கூறுகிறார்கள். ஆனால், ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்கான வழிகளை எவரும் கவனிப்பதில்லை. நம்நாடு முற்போக்கடையவேண்டுமாயின், நாம் பெண்கல்வியை அபிவிருத்திசெய்து, அவர்களையும் நம்மோடு சேர்த்துக்கொண்டு பொதுநன்மைக்கான காரியங்களில் உழைக்கவேண்டும்.

---

## The Lost Will

By Mr. M. S. Krishnaswamy Aiyar.

*Author of Stolen Bride, Power of Love etc.*

## காணமற்போன மரணசாஸனம்.

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

### 2-ம் அத்தியாயம்.

கல்யாணபுரம் என்ற கிராமத்தில் நீலகண்ட சாஸ்திரிகள் என்று ஒரு அந்தணசிரேஷ்டர் இருந்தார். அவருக்குச் செல்வப்பொருள் ஒழிந்த ஏனைய சௌகரியங்களெல்லாம் ஒருவாறு நிறைந்திருந்தன. இரண்டுவேதம், இரண்டு சாஸ்திரம், இரண்டு ஸூத்ரம் அவருக்கு நன்றாய்த் தெரியும். மற்றபடி லோகவ்யவஹாரங்களிலும் அவருக்கு அனுபவம் அதிகமுண்டு. ஊரில் அவருக்கு அதிக மதிப்பு உண்டு. அவர் பரம்பரையாக உபாத்யாயத் தொழிலைச் சேர்ந்தவரல்லர்; காலவித்தியாசத்தால் அவருடைய தந்தை தமது சிறிது பொருளை இழந்து கஷ்டப்பட நேர்ந்தது. தனது புத்ரனும் கஷ்டப்படாமலிருக்க, அவருக்கு வேதசாஸ்திரங்கள் கற்பித்து, வைதிக மார்க்கத்தில் வயிறுவளர்க்கக் கற்பித்தார். நீலகண்டசாஸ்திரிகள் மிகவும் ஏழையானாலும், பொருளுக்காகக் கண்டவிடமெல்லாம் அலைவதில்லை. கௌரவக் குறைவாய்த் தக்ஷிணைக்குக் கைநீட்டுவதில்லை. அவர் சற்குணசீலரென்று அறிந்த பலரும், அவருக்குச் செய்யவேண்டிய பொருளுதவியை மனஞ்சலிக்காது திருப்தியுடன் செய்துவந்தனர். அவருடைய ஒரே

புத்ரர்தான் முன் அத்தியாயத்தில் கூறிய சங்கரய்யர். சாஸ்திரியார் தமது பையனை இங்கிலீஷ் படிக்கும்படி அவ்வூருக்கு அருகிலுள்ள ஓர் கிராமத்து இங்கிலீஷ் பாடசாலையில் சேர்த்தார். பையன் படிப்பில் அக்கறை சிறிதும் கொள்ளாமல், விளையாட்டையே பெரிதாகக் கொண்டு காலத்தை வீணாக்கிவந்தான். சில காலஞ் சென்றபின் பையன் படிப்பில் விருத்தியாகாதது கண்டு, அவனையும் தமது கூட்டத்தில் சேர்த்துக் கௌரவமாய்க் காலங்கழிக்க ஏற்பாடுசெய்ய எண்ணங்கொண்டார். பையனுக்கு அரசங்குச்சியும் நாணற்புல்லும் பிடிக்கவில்லை. வேதம் அவன் வாயில் நுழையவில்லை. சில ஸம்ஸ்கிருத பதங்களைச் சுரத்துடன் மனப்பாடம் செய்யமுடியாத இவன் மூளையில், வியாகரணமும் வேதாந்தமும் ஏறுவதேது? வெட்டிச்சோறு தின்பதும், மரமேறிக் காய்கனிகள் திருடுவதும், ஊர் சுற்றுவதுமாகத் தன் காலத்தைக் கழித்துவந்தான். தனயனுடைய நடத்தையைக்கண்டு மனந்தளர்ந்த சாஸ்திரியார், சிலகாலம் வியாதியாயிருந்து பரமபதமெய்தினார். அவர் மனைவியும், இரண்டொரு மாஸங்களுக்கெல்லாம், புருஷனைவிட்டுப் பிரிந்திருத்தல் மனைவிக்கேற்றதன்றென்று எண்ணி அவர் சென்றவிடம் சென்றனள்.

தந்தையையும் தாயையும், அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் இழந்த சங்கரன், இனியொருவருக்கும் பயப்பட்டு நடக்கவேண்டியதில்லையென்று திடங்கொண்டு, தனது சுற்றத்தார் ஒருவருக்கும் தெரிவிக்காமல் தன் ஊர்விட்டு எவ்விடமோ சென்று மறைந்தனன். அவனது நெருங்கிய பந்துக்கள் பலவிடங்களில் தேடியும், அவன் அகப்படவில்லை.

இப்படியாகப் பத்துவருஷங்கள் கழிந்தன. பின்பு ஒருநாள், சங்கரன் தன்னூருக்குத் திரும்பிவந்தான். வண்டிநிறைய மூட்டைகளும் பெட்டிகளும் கொண்டுவந்த அவனைக் கண்டு, பலர் வியப்படைந்தார்கள். சிலநாட்களில் சங்கரய்யர் வேற்றூர்களில் பெரும்பொருள் ஸம்பாதித்து வந்தாரென்ற செய்தி ஊரெல்லாம் பரவிற்று. சங்கரய்யர் தமது தந்தை குடியிருந்த வீட்டைச் செப்பனிட்டு அதில் குடியிருந்துவந்தார். அவருக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. அவனிடம் அபிமானங்கொண்ட சில எட்டின பந்துக்களும் அவனது தந்தையின் நண்பர்களும் அவ்விஷயத்தில் அதிக ஊக்கங்கொண்டார்கள். அவனது செல்வநிலைமை இன்னதென்று அறியாத பெண்ணைப் பெற்ற சிலர், அவருக்குப் பெண்கொடுக்க உடன்படவில்லை. இதன் உண்மையை அறிந்த சங்கரய்யர், தாமடைந்த பொருளைக்கொண்டு தமதூரிலும் பக்கத்தூரிலும் அடிக்கடி நிலங்கள் வாங்கலாயினர். அதனால், அவர் அதிகப்பொருள் படைத்தவரென்று பலருக்குந் தெரியவந்தது. இதன்மேல் சங்கரய்யருடைய தாய்வழி உறவினர் ஒருவர் தமது பெண்ணை அவருக்கு மணஞ்செய்விக்க உடன்பட, கல்யாணமும் நடைபெற்றது. கல்யாணமான சில மாதங்களுக்கெல்லாம் அவர் மனைவி சுந்தரம் வயதடைந்தனள். அதற்குச் சிலகாலத்துக்கெல்லாம் இருவரும் கல்யாணபுரத்தில் மனமொப்பிக் குடித்தனம் செய்துவந்தார்கள்.

சங்கரய்யர் முன்போலன்றிக் குணம் மாறியிருந்தார். மக்கு சங்கரன் என்றும், துஷ்ட சங்கரனென்றும், தர்ப்பக்கட்டை சாஸ்திரிகள் பிள்ளையென்றும் பலவாறு இகழ்ந்த பலர், அவரது நற்குணங்களைக்கண்டு வியப்படைந்தனர். அவர் பல விஷயங்களிலும் அனுபவ அறிவுடன் பேசுவதைக்கண்டு, வயதுசென்ற கிழவர்களும் அவருடைய வார்த்தைக்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்புக்கொடுத்தார்கள். காலக்கிரமத்தில் அவர் ஊரில் ஒரு செல்வாக்குள்ளவரானார். அவரை யோசனைகேளாது ஊரில் பொதுக்காரியம் ஒன்றும் நடப்பதில்லை.

சங்கரய்யர் ஊருக்கேயன்றி வீட்டுக்கும் நல்லவராக இருந்தார். சங்கரய்யராவது அவர் மனைவி சுந்தரமாவது ஒருநாளாவது வருத்தப்

பட்டதில்லை. ஒருவர்க்கொருவர்க்கு ஒருநாளும் மனஸ்தாபம் ஏற்பட்டதில்லை. சுந்தரம் எப்போதும் தனது கணவனை மகிழச்செய்வதிலும், அவருடைய மனமறிந்து அவருடைய விருப்பங்களை நிறைவேற்றுவதுமாயிருந்தாள். இரண்டு வருஷங்கழித்து அவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு நீலகண்டன் எனப்பெயர் கொடுக்கப்பட்டது. சங்கரய்யர் தமது குழந்தையையும் மனைவியையும் முன்னிலும் அதிகமாக அன்புடன் பாராட்டி நேசித்துவந்தார்.

உலகத்தில் கஷ்டப்படுவோரைக்கண்டு எவரும் பரிதாபங்கொள்ளுவதுண்டு. ஆனால், கஷ்டப்படுவோர் தெய்வவசத்தால் நற்கதியடைந்து சீரும்சிறப்புமாய் வாழ்வார்களாயின், முன்பு பரிதபித்தவர்களே மனம் வேறுபட்டு சீரும்சிறப்புமாய் வாழ்பவர்களைக்கண்டு பொறாமை கொள்வதுமுண்டு. பொதுவாய்ச் சொல்லுமிடத்து: கல்யாணபுரத்தில் சுந்தரம்மாளைக் கண்டு ஆனந்தமடையாதார் ஒருவருமில்லையென்னலாம். சிலர் அவளது நிலைமைக்குத் தங்கள் நிலைமை மிகவும் தாழ்ந்ததென வருந்தி நின்றதுண்டெனினும், சுந்தரத்தின்மேல் பொறாமையாவது வெறுப்பாவது கொண்டது கிடையாது. அவள் யாரிடத்திலும் மரியாதையாய் நடந்துவந்ததனாலும், கேட்டவர்க்கில்லையென்று சொல்லாமல் கொடுத்து உதவிவந்ததனாலும், நாம் செல்வவானுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறோமென்று இறுமாப்புக்கொண்டு பலரையும் அலக்ஷியம்செய்து நடவாமல் யாவரிடத்திலும் பணிவுடனும் அன்புடனும் நடந்துவந்ததனாலும் அவளிடம் விரோதம் கொள்வார் ஒருவரும் இல்லாதுபோயிற்று.

இவ்விதம் பத்து வருஷங்கள் சென்றன. ஒருசமயம் சுந்தரம்மாளுக்குக் காய்ச்சலும் வேறு வியாதிகளும் உண்டாகி அவளை மிகவும் வருத்தின. அதனால், அவள் மிகவும் உடல் மெலிந்து, எழுந்துநடக்கச் சக்தியற்றுப்போனாள். அவளது கணவர் அவள்பால் கொண்ட பிரியத்தால் ஏராளமாய்ப் பணம் செலவழித்து வைத்யம்செய்தார். ஆனால், வியாதி குணப்படவில்லை. இப்படி ஒருவருஷம் சென்றபின், அவளது ஸகோதரராகிய ராமய்யர், அவளைத் தமதூருக்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்தியம் செய்வித்தார். அவ்வூரில் இருந்த வைத்தியன் அதிக சாமர்த்யமில்லாதவனாயிருந்தும், சுந்தரத்தின் அதிருஷ்டவசத்தால் வியாதி மெள்ளமெள்ளக்குணமடைந்து வந்தது. வியாதி விஷயத்தில் சுந்தரம் அதிருஷ்டமுடையவளாயிருந்தாலும், மற்ற பாக்கியங்கள் விஷயத்தில் துர்திருஷ்டம் அவளைச் சூழலாயிற்று. இதுவரையில் அவளை அளவிலா அன்புகொண்டு ஆதரித்துவந்த சங்கரய்யர், தமது மனைவியில்லாததைமுன்னிட்டுப் பற்பல ஊர்களையும் புண்ணிய நகரங்களையும் சுற்றிப்பார்த்துவரும்போது, ஒரு ஊரில் ஒரு பெண்ணை இரண்டாவது மனைவியாக மணம்செய்துகொண்டார்: அவளுக்குத் தந்தையில்லை; தாயும் இரண்டு சகோதரர்களுமே யிருந்தனர். அவள் சற்று அழகுள்ளவள்; ஸங்கீதம் சற்றுத் தெரிந்தவள்; தற்கால நாகரிகப்படி நடக்கும் இயல்புடையவள். கலியாணமானதும் சங்கரய்யர் சேஷி என்ற தமது இரண்டாவது மனைவியையும் அவளுடைய தாயையும்கல்யாணபுரத்துக்கழைத்து வந்தார். இரண்டொரு மாஸங்களுக்குப் பிறகு சேஷி ருதுவாகி, சாந்திமுகூர்த்தமும் நடந்தது. சங்கரய்யர் இளையாள்வலையில் அகப்பட்டவராய் அவள் சொற்படி நடந்து, அவளுடன் பிரியமாய் வாழ்ந்துவரலானார். அவருக்குச் சுந்தரத்தின் நினைவுபோய்விட்டது. சிற்சில ஸமயங்களில் அவளைப்பற்றிப் பிரஸ்தாபம் வந்து அதனால் அவள் ஞாபகம் ஏற்பட்டாலும், அவளைப்பற்றி அதிகம் சிந்திப்பதில்லை; அவள் பழையகாலத்துப் பெண் என்றும், நாகரிகம் தெரியாதவளென்றும் அவளை யிகழ்ந்து அவளைப் புறக்கணித்துவந்தார். இவ்விஷயங்களையறிந்த சுந்தரம், மிகவும் மனம் நொந்தாள்; சிலஸமயம் அலறினாள்; வந்த வியாதி தன்னைக் கொண்டுபோயிருக்கக்கூடாதாவென்று அழுதாள்.

சுந்தரம்மாளுக்குத் தன் கணவன்மேல் கோபமே உண்டாகவில்லை. அவரிடம் சற்றும் வெறுப்புக்கொள்ளவில்லை. எப்படியாவது அவர் ஸௌக்யமாய் இருந்தால், அதுவே தனக்குப் போதுமென்று எண்ணினள்; அவர்களிடம் வேலையாவது செய்துகொண்டு, அவர் முகத்தைத் தினம் பார்த்துக்கொண்டிருந்தால், அதுவே தனக்குப் போதுமென்று எண்ணினள்; சீக்ரம் தன்வீடு போகவேண்டுமென்று நிச்சயங்கொண்டாள். அதற்கேற்ப, அவளுடைய வியாதியும் முற்றிலும் குணப்பட்டுவிட்டது. தனது உடன்பிறந்தானைக் கூட்டிக்கொண்டு தனது வீடுவந்து சேர்ந்தாள். இவள்வரவைத் தூரத்திலிருந்து கண்ட சங்கரய்யர், தாம்அங்கிருந்தால் சண்டைசச்சரவு ஏற்படலாமென்று எண்ணி, அவ்வூர்க்கோயிலுக்குப் போய்விட்டார். சுந்தரம் வீட்டினுள் புகுந்ததும், சேஷியும் அவள்தாயாரும் காலகண்டிகள்போல் சண்டைபோட ஆரம்பித்துவிட்டார்கள். புருஷன் தள்ளிவிட்டபிறகு அவள் வீட்டில் காலெடுத்து வைக்கப் பாத்தியமில்லையென்று அதிகாரம் செய்தார்கள். சுந்தரம் அதிகமாய் ஒன்றும் பேசாமல் தன் புருஷன் வரவை எதிர்பார்த்தவளாய்க் கூடத்தின் ஒருபுறத்தில் உட்கார்ந்துகொண்டாள். சண்டையைப் பார்த்த ராமய்யர், ஒன்றுந் தோன்றாதவராய் வாயில் திண்ணையில் உட்கார்ந்துகொண்டார். இரண்டு மூன்று நாழிகைக்கெல்லாம் சங்கரய்யர் வீடு வந்து சேர்ந்ததும், சுந்தரம் அவர் காலில் விழுந்து தன்னை அலக்ஷியம் செய்யாது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சினள். அவர் சுந்தரத்தைக்கண்டதும் பூர்வஞாபகங்கள் உண்டாகவே, சற்றுத் தயங்கினர். இதற்குள், தாயும் பெண்ணும் கூக்குரலிட்டு உரத்துப்பேசி, சுந்தரத்தைக் கண்டபடி திட்டி, சங்கரய்யருக்குப் பல துர்ப்போதனைகள் செய்து, அவளை வெளியில் பிடித்துத் தள்ளும்படி செய்தார்கள். ராமய்யர் சங்கரய்யருக்குப் பலவாறு புத்திமதிகள் சொல்லியும் பயன்படவில்லை. இரண்டொரு நாள் தங்கிப்பார்த்தும், சங்கரய்யர் மனம் திரும்பாமல் வரவரச் சுந்தரத்தின்மேல் வெறுப்பு அதிகரிக்கவே, வாதாடுவதில் பயனில்லையென்று கண்ட ராமய்யர், தமது தங்கையையழைத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்.

சுந்தரம் மனம் முறிந்தாள்; உடல் மெலிந்தாள்; புருஷனைவிட்டுப் பிரிந்த வாழ்க்கை என்ன வாழ்க்கையென மனம் நொந்தாள்; தான் உயிரோடு இருப்பதால்தான் இத்தனை துக்கங்களுக்கும் இடமேற்படுகிறதென்று எண்ணித் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்தாள்; இரண்டொரு சமயங்களில் தன்னுயிரை நீத்துக்கொள்ள முயன்றாள்; தனது சகோதரனது ஆறுதல்மொழிகளாலும், சகோதரன்மனைவியின் அன்பாலும், தனது குழந்தையைவிட்டுப் பிரிய மனம் வராததனாலும் ஒருவாறு மனந்திடங்கொண்டு, தனது பிள்ளை பெரியவனாகிறவரையிலாவது தன்னுயிரைவைத்துக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானித்தாள். ஆயினும், அவள் ஊண் உறக்கம் முதலியவைகளைப் பெரும்பாலும் துறந்தவளாய்த் தனது கணவனையே ஸதா தியானம்செய்துகொண்டு, தான் சாகுமுன் எப்போதாவது தன்னை அவர் அழைத்துக்கொள்ளவேண்டுமென்னும் ஒரேவரத்தை அபேக்ஷித்தவளாய்ப் பற்பல தெய்வங்களையும் ஆராதித்துக்கொண்டு காலங்கழித்துவந்தாள். இவ்விதம் மூன்று வருஷங்கள் சென்றன.

## 3-வது அத்தியாயம்.

சேஷியம்மாள் சமையலறையில் உட்கார்ந்துகொண்டு தன்னெதிரில் ஒரு அரிவாள்மணையை வைத்துக்கொண்டு, கொத்தவரங்காய்களின் காம்புகளையும் நுனிகளையும் ஆய்ந்துகொண்டிருந்தாள். அவளருகில் சில கத்தரிக்காய்கள் கிடந்தன. அவளுக்குச் சற்றுத் தூரத்தில் சிறு துணியில் ஒரு குழந்தை படுத்து விளையாடிக்கொண்டிருந்தது. அது பிறந்து ஐந்தாறுமாஸமிருக்கலாம். அடுப்பில் சாதம் கொதித்துக்கொண்டிருந்தது. அவள் சிறிது நேரம் யோசனையிலாழ்ந்தவளாய், கொத்தவரங்காய்களின் காம்புகளையும் நுனிகளையும் மெதுவாக ஆய்ந்து

கொண்டிருந்தாள். அவள் தன்னை மெய்ம்மறந்து சிந்தித்துக்கொண்டிருந்ததால், இரண்டு வீடு தள்ளிக் குடியிருக்கும் அலமேலம்மாள் அவ்வறைக்குள் நுழைந்ததைக் கவனிக்கவில்லை.

“ஏண்டி, சேஷி. என்ன செய்கிறாய்? கையில் கொத்தவரங்காயை வைத்துக்கொண்டு என்ன யோசிக்கிறாய்?”

சேஷியம்மாள் உடனே ஆலோசனையிலிருந்து விழித்துக்கொண்டு, “யார், அலமேலு மாமியா? வாங்கோ, உட்காருங்கள்” என்றாள்.

“என்ன? நான் வந்ததுகூடத் தெரியாமல் என்னவோ எண்ணிக்கொண்டிருக்கிறாய்? உன்னைப்பார்த்தால் ஏதோ கவலைப்படுகிறவள்போல் தோன்றுகிறதே.”

“கவலைக்கென்னம்மா? நாம் பிறந்ததே கவலைப்படத்தானே. சுகப்படவா பெண் ஜன்மம் எடுத்தோம்.”

“ஏன், கவலை யென்னத்துக்கு? கவலையெல்லாம் ஒழிக்கத்தான் ராஜாவாட்டமா பிறந்திருக்கிறானே. இனிமேல் உனக்கு விசாரமென்ன?”

“மாமி, என்வயிற்றெரிச்சலைக் கிளப்பாதேயுங்கள். அதைப்பற்றி யென்ன, கஷ்டமோ நிஷ்டூரமோ நான் அனுபவிக்கவேண்டியவள். இதையெல்லாம் பிறரிடத்தில் சொல்லுவானேன்” என்று ஆக்ரமாய்ப் பேசிவிட்டு—“எது வந்தது மாமி?”

“ஒன்றுக்கும் இல்லை. துருவுபலகையைச்சரிப்படுத்தவேண்டுமென்று நூறுதடவைசொல்லியாயிற்று. ஆத்திலே காதில் போட்டுக்கொள்கிறதேயில்லை. எத்தனை நாள்தான் துருவுபலகைக்காக ஒவ்வொரு அகமாகப் போகிறது? என்ன சொன்னாலும் அந்தப் பிராமணருக்குக் காதில் விழுவதில்லை. ஆனால் மாத்திரம், ‘தேங்காய் கொண்டுவந்தேனே, ஒரு துவையலரைக்கப்படாதா? கறியில் தேங்காயைத் துருவிப் போடுகிறதுதானே’ யென்று ஸதா திட்டிக்கொண்டுதான் சாப்பிடுகிறது. என்ன குடித்தனம் வேண்டியிருக்கிறது! உன்னாட்டமா ஸொத்துக்காரராயிருந்தால் பாதகமில்லை. உளுத்தம்பருப்பு ஆய்விட்டது. வாங்கிப்போடவேணும் என்று நாலுநாளாய்ச் சொல்லிவருகிறேன். காதில் போட்டுக்கொள்ளவில்லை. அஞ்சறைப்பெட்டியில் இருந்த கொஞ்சம் பருப்பும் நேற்றோடு தீர்ந்துவிட்டது. சொன்னால்மாத்ரம் கோபம். கறியில் உளுத்தம்பருப்புக் கொஞ்சம் குறைந்தால் ‘நாயே பேயே’ என்றுதான் பேச்சு. என்ன வேண்டியிருக்கடி! எங்கேயேனும் போய் அக்கடா என்று ஒருமாஸமாவது இருக்கலாமென்றால், உன்னைப்போல் எனக்குப் பிறந்தகமிருக்கா?”

“மாமி, என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதேயுங்களேன். எனக்கு வருத்தமாயிருக்கிறது.”

“ஏண்டி, என்ன வருத்தம்? குழந்தை பிறக்கவில்லை; ஸொத்துக்குப் பிறந்தவன் வந்துவிட்டால், உன்பாடு திண்டாட்டமென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாய். இப்போதுதான் மணியாட்டமாய் குழந்தை இருக்கானே. விசாரமென்ன?

“நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்போ அதெல்லாம் ஆகாசக்கோட்டையாய்ப் போச்சு.”

“ஏன்?”

“நமக்குக் குழந்தை பிறந்தால் பாதி ஸொத்தாவது கிடைக்குமென்று நினைத்தேன். இப்போ பஞ்சப்படி கிடைத்தால் அதுவே பாக்யமென்று சொல்லவேணும்.”

“நீ சொல்லுவது எனக்குத் தெரியவில்லையே.”

“அவள் வந்து ஒரு மாஸமாக உட்கார்ந்துகொண்டிருக்காளோல்லியோ. என்ன உபதேசம் பண்ணினாளோ தெரியவில்லை. நேற்றுத்தான் ரெஜிஸ்டராச்சு. ஸொத்து முழுவதும் அவளுக்கும் அவள் பிள்ளைக்குமாம். அப்பா சாஸ்திரி குடியிருக்கிற வீடு எனக்கு. அதோடு இரண்டு காணி விட்டிருக்கிறார்கள். நான் இருந்த இருப்பென்ன? இப்போ எங்கே தள்ளிவிட்டிருக்கா, பாருங்கள்.”

"உன்மேல் பிசகு என்றுதான் சொல்லுவேன். நீ சுந்தரத்தை இங்கே வரவிட்டிருக்கக்கூடாது."

"அதற்கு நானென்ன மாமி செய்கிறது?"

"உன்னைக் கூப்பிட்டவுடன் வந்துவிடுகிறது தானே. அவர்தான் நாள் பார்த்து அனுப்பினரே. உடனே புறப்படப்படாதோ. அவர் உடம்பு சரிப்படாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, நீ பிறந்தாத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கலாமா?"

"இப்படி ஒரு நொடியில் மனம் மாறுமென்று நினைத்தேனா? அது என் தலையிலெழுத்து. அதுதான் போகட்டும். நான் வந்தவுடன் சண்டை சண்டையாகப் பிடித்தார்; வாயிலே வாராத வார்த்தையெல்லாம் சொன்னார். நானிருந்த பிரியத்துக்கு அவர் சொன்ன வார்த்தையெல்லாம் நினைத்தால், இப்போ பகீரென்கிறதம்மா! என்னவோ மருந்துபோட்டு மயக்கிவிட்டாள். எப்படியாவது அவர் பிழைத்துக்கொண்டால், அவர் மனதை மாற்றிவிட்டாலும் விடலாம். என்பாடு எப்படியாவது போகிறது. எங்கேயாவது உழைத்தாவது சாப்பிடுகிறேன். அவல் குத்திப் பிழைக்கிறேன். அப்பளமிடுகிறேன். என் குழந்தை கதியென்ன? இரண்டு காணியை வைத்துக்கொண்டு என்ன வாசித்துக் குப்பைகொட்டுகிறது?"

"ஏன் இப்படி அவர்மனம் மாறிப்போயிற்று?"

"என்னவென்று சொல்லுகிறதம்மா? பிள்ளைபெறப் போனபோது அவர் பிரியமாய்த்தானிருந்தார். புண்ணியாஹவசனத்துக்கு வந்தபோது ஒரு மாதிரியாயிருந்தார். சரியாய்ப் பேசவில்லை. குழந்தையைக்கூடச் சரியாய்ப் பார்க்கவில்லை. என்னவோ என்று பேசாமலிருந்தேன். மறுபடியும், இரண்டு மாஸங் கழித்து வந்தார். அப்போது என்மேல் கோபங்கொண்டு கன்னாபின்னாவென்று வைதார். என் நடத்தை வரவரக் கெட்டுப்போயிற்றாம். என் கஷ்டகாலம். ஒருவர்மேல் சொல்லக் குற்றமில்லை. பிறகு அவர் திடீரென்று உடம்பு சரிப்படாமல் கஷ்டப்படுவதாகக் கடிதாசி எழுதியிருந்தார். நல்லநாள் அகப்படவில்லை. நாள் அகப்பட்டதும் புறப்படலாமென்றிருந்தேன். அதற்குள் சக்களத்தி வந்துவிட்டாள். ஸதா அவளுடன்தான் பேச்சு. அவள்தான் கஞ்சி வைத்துக் கொடுக்கிறாள். அவள்தான் தீர்த்தம் கொடுக்கிறாள். என்னை முகமெடுத்துப் பார்ப்பதே கிடையாது. குழந்தையைக்கூடப் பார்க்கவில்லை. என்னைக் கண்டால் அவ்வளவு கசத்துப்போயிற்று."

"இப்போது அவருக்கு உடம்பு எப்படியிருக்கிறது?"

"உடம்பு தேவலை. எழுந்து சற்று நடமாடுகிறார். இன்னும் ஒரு வாரத்தில் குணமாகிவிடும்."

ஸம்பாஷணை இன்னும் சிறிதுநேரம் நடந்தது. பிறகு அலர்மேலம்மாள் தேங்காய்துருவத் துருவுபலகையையும், ஒரு கரண்டி "கடனாக, அளவாக" உளுத்தம்பருப்பையும் வாங்கிக்கொண்டு போனாள். சேஷி அம்மாள் இனாமாகக் கொடுத்துவிடவில்லை. தனக்கு வந்த பெயரையும் நஷ்டத்தையும் மாற்றிக்கொள்ள யோசனை கேட்டுக்கொண்டாள்.

(தொடரும்.)

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.


## ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டுள்ளது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது. வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது.

விலை அணா 6. தபாற்செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்,

(தென்னிந்தியா).

# Ancient Stories of South India.

## தென்னிந்திய புராதனக் கதைகள்.

[53-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே அவர்கள் இருவரும் பிச்சைக்கார வேஷம் தரித்து எவரும் பார்க்காமல் முருங்க மரத்தடிக்கு வந்தனர். பகல்திருடன் மரமேறி முருங்கக்காய் பறிக்கத் தொடங்கினான். மரத்தடியில் ஸுகுணவதி நெருப்புமூட்ட ஆரம்பித்தாள். இதற்குள் ராஜ சேவகர்கள் சவத்தை வண்டியில் போட்டுக்கொண்டு அந்த வழியாய் வந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் வண்டியும் மரத்திற்கு ஸரியாய் வந்தது. உடனே பகல் திருடன் அதிக சமத்காரமாய்க் கீழே விழுந்தான். ஸுகுணவதி ஓ வென்று அலறிக்கொண்டு அவன்மீது விழுந்து அழத் தொடங்கினாள். "ஆஹா! அகப்பட்டு விட்டார்கள் திருடர்கள்; அகப்பட்டு விட்டார்கள்" என்று சேவகர்கள் அவர்களின் அருகே போகும்போது, ஸுகுணவதி அவர்களைப் பார்த்து, "அப்பா! அப்பா! எனக்கு ஒரே பிள்ளை. என் புருஷன் கொஞ்சகாலத்திற்கு முன் இறந்து போய்விட்டார். நானும் என் பிள்ளையும் பிச்சையெடுக்க வந்தோம். இந்த வீதியிலுள்ள மரத்தில் காய்கள் நிறைய இருப்பதைப் பார்த்து, அதன்மீது ஆசைப்பட்டு அவன் கீழே விழுந்து இக்கதியானான். ஐயோ! தெய்வமே! நான் என்ன செய்வேன்? இப்படியும் என்னைப் பரீக்ஷிக்க வேண்டுமா? புருஷன் போனதுமல்லாமல் எனது ஒரு குமாரனைக் கூட இப்படிப் பண்ணிவிட்டாயே! இனி என் கதி என்ன? ஐயோ குழந்தையே! நீ என்டா மரத்தின்மீது ஏறினாய்? ..........." என்று ஓலமிட்டாள். அவளது வார்த்தையைக்கேட்டு ராஜ சேவகர்கள் நாம் என்ன மோசம் போய் விட்டோமென்று அவ்விடமிருந்து வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள்; பட்டணம் முழுவதும் வண்டியை ஓட்டிக்கொண்டு திரிந்தார்கள். அந்தத் திருடனது முண்டத்தைப் பார்த்து ஒருவராவது அழவில்லை. அந்த ஸங்கதியை அவர்கள் ராஜாவுக்குத் தெரியப்படுத்தினார்கள்; கூடப் பிச்சைக்காரனுடைய விருத்தாந்தத்தையும் அரசனிடம் சொன்னார்கள். "அந்தப் பிச்சைக்காரர்கள் திருடனுடைய உடலைப் பார்த்து அழுதவர்களே. அந்த ஸ்திரீ அவனுடைய பெண்சாதி. அந்தப்பையன் அவனுடைய பிள்ளை. இவ்வளவு தெரியாமல் போயிற்று உங்களுக்கு. முட்டாள்களே! ஸரி, நடந்துபோனது போகட்டும், இனிமேலாவது ஜாக்கிரதையாயிருங்கள். இன்றிரவு இந்த முண்டத்தைச் சுடுகாட்டில் வைத்துக் கொளுத்த வேண்டும். தீயிலிட்டவுடன் நீங்கள் பக்கத்தில் மறைந்திருந்து கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருங்கள். அந்தத் தீயில் தலையைப் போட்டுச் செல்லத் திருடன் குமாரன் அவ்விடம் வருவான். அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அரசன் கட்டளையிட்டான். பகல் திருடன் இராஜ சபையில் உட்கார்ந்து இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

அன்றிரவு ராஜசேவகர்கள் அரசன்சொன்ன பிரகாரம் அந்த முண்டத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய்க் காஷ்டத்தின்மீது வைத்துத் தீமூட்டிவிட்டு, நாலாதிக்குக்களிலும் உருவின கத்திகள் உருவினபடியே திருடன் வந்தவுடன் சற்றும் தாமதிக்காமல் அப்படியே பிடித்துக் கொள்ள வேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தனர். அப்போது பகல்திருடன் மரக்கால்களைக் கட்டிக்கொண்டு முகம்நிறையக் கரிபூசித் தலைமயிரையவிழ்த்துத் தாறுமாறுமாகத் தொங்கவிட்டுக்கொண்டு, ரக்த வேஷ்டிகள் கட்டி, ஒரு கையில் தீவர்த்தியும், மற்றொரு கையில் கத்தியும் எடுத்துக்கொண்டு, தகப்பனார் சிரஸை மூட்டையாகக் கட்டித் தோள்மீது போட்டுக்கொண்டு, கால்களில் கிண்கிண்ணென்று சப்திக்கும் கஜ்ஜைகளைக்கட்டி, ஹா.

ஹா-ஹூவெனபெரிய ஹூங்காரம்செய்துகொண்டு சுடலையண்டை பெரிய ஆர்ப்பாட்டத்துடன் ஓடிவந்தான். அதைக்கண்டு சுற்றியிருந்த வீரப் புலிகள் எல்லோரும் இந்த மயானத்துப் பெரியபூதம் இரைதேடி வந்ததென்று ஒருவர்மீதொருவர் விழுந்து கத்திக் கதறிக் கொண்டு ஓடிப்போய் விட்டார்கள். உடனே பகல்திருடன் மூட்டையினின்று தகப்பனார்சிரஸையெடுத்துக் காஷ்டத்தைச் சுற்றிப் பிரதக்ஷிணம் வந்து, அந்தத் தலையைத் தீயிலிட்டுச் சப்தம் செய்யாமல் வீட்டுக்குப் போய்விட்டான்.

அடுத்தநாள் சூரியோதயமானவுடன் பகல் திருடன் ராஜசபைக்குப் போனான். சேவகர்கள் வந்து இரவு நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் அரசனிடம்சொன்னார்கள். அதைக்கேட்டு மகாராஜா, "அடே முட்டாள்களே! உங்களுக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா? நன்றாய்ச் சாப்பிடச்சொன்னால், வயிறு நிரம்பத் தின்னுவீர்கள். பூதமேது பிசாசேது? அங்கே வந்தது அந்தத் திருட்டுப் பிசாசுதான். செத்தவன் பிள்ளையவன். இது தெரியாமற் போயிற்றே உங்களுக்கு! இனிப் பன்னிப்பன்னி யுரைப்பதில் என்ன பிரயோஜனம்? அந்தத்திருடன் மகன் காலையில் அவசியம் பால்தெளிக்கவருவான். ஆகையால், நீங்கள் போய்ச் சுடுகாட்டில் சாம்பலண்டையில் காவலிருங்கள்" என்று சொல்லியனுப்பினார். "சித்தம் மகாராஜா" வென்று அவர்கள் தத்க்ஷணமே போய்விட்டார்கள். மயானத்துக்குப் பகல்திருடன் அரசனுடைய மந்தையை மேய்க்கும் ஆட்டிடையனைப் போல் வேஷம்போட்டு பால்நிறைந்த நாலைந்து பல்லாக்களைத் தலைமீது ஒன்றன்மேலொன்றாக வைத்துக்கொண்டு சுடலைக்கு அப்பாலிருந்து கோட்டையை நோக்கிவந்துகொண்டிருந்தான். காவலாளிகள் அவனைப்பார்த்து, அதட்டிக் கொஞ்சம் பால் வாங்கிக்கொள்ளலாமென்று நினைத்து அவனைக் கிட்டவரச் சொன்னார்கள். அவன் அருகேவந்து ஏன் கூப்பிட்டீர்களெனக் கேட்க, 'பாற்பல்லாக்களைக் கீழே இறக்கிவை' என்றார்கள்; அவன் மாட்டேனென்றான். 'மாட்டேனென்றால் விட்டுவிடுவோமோ' என்று அவர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் தப்பித்துக்கொள்ளப்பார்த்தான். 'அடே நீ எங்கே ஓடிப்போவாய்?" என்று அவர்கள் மிரட்ட, அவன் திடீரென அவர்களை ஏமாற்றி அவர்கள் கையினின்றும் விலகிக் கொண்டான். அவ்வாறு விலகிக்கொள்ளும் போது தலைமீதிருந்த பல்லாக்கள் சுடலைச் சாம்பலின்மேல் விழுந்து சுக்கல்சுக்கலாய் உடைந்து பாலெல்லாம் கீழே ஊற்றிக்கொண்டு போய்விட்டது. உடனே அவன் மஹா கோபங் கொண்டவனைப்போல் நடித்து, "ராஜாவுக்குப் பால் கொண்டுபோகும்போது என்னை இவ்வாறு வழிமறித்த விஷயத்தை நான் அரசருக்குத் தெரிவித்து, உங்களைப் படுத்திவைக்கும் பாட்டைப் பாருங்கள்" என்று கோட்டை முகமாய் ஓடினான். அவன் முன்னே போய்ச் சொல்லிவிட்டால், ராஜா எங்கே தங்களைத் தண்டிக்கப்போகிறாரோ என்று பயந்து சேவகர்கள் குறுக்கு வழியாய் ஓடி நடந்ததை ராஜாவுக்கு அறிவித்தார்கள். அதைக்கேட்டு இவர்களுடைய மூடத்தனத்தையும் அயோக்கியதையையும் கண்டு ராஜா கடுங்கோபமுற்று, "திருடனுடைய மகனே அந்த இடைய வேஷம்போட்டு வந்தது. தகப்பனார் அஸ்தியின்மீது பால் தெளித்துச் சென்றான். நீங்களெல்லோரும் முழு மூடர்களென அவன் நன்றாய்க் கண்டு கொண்டான். இனி அவனைப் பிடிப்பது உங்களால் திறமன்று. என்முன் நிற்கவேண்டாம். நிரம்பக் கஷ்டப்பட்டீர்களே, வீட்டுக்குப் போய் வயிறு நிறையக் கொட்டிக்கொண்டு இளைப் பாறுங்கள். நீங்கள் அதற்குத்தான் யோக்கியதை" என்று அவர்களை நிந்தித்துவிட்டு, ஒரு ஸர்தாரைப்பார்த்து, "அத்திருடன் ராத்ரி வந்து அஸ்தியைப் பொறுக்குவான். ஆதலால், நீ தயாராய்க் காத்திருந்து அவனைப் பிடித்து வா" என்று உத்தரவு [illegible]. பகல் திருடன் ஸபையிலிருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டான்.

அன்றிரவு அந்த ஸர்தார் ராஜா சொன்ன ப்ரகாரம் சுடலைக்குச் சென்று டேரா போட்டு, திருடனுடைய அஸ்தியின்மீது தன் கட்டிலைப் போட்டுக்கொண்டு, சுற்றிலும் ஆயுததாரிகளான வீரர்கள் சிலரைக் காவல்வைத்துப் படுத்துக்கொண்டான். பகல்திருடன் அந்த ஸர்தார் வைத்துக்கொண்டிருக்கும் வேசையைப்போல் வேஷம்போட்டுச்சுடுகாட்டுப் பக்கம் வந்தான். காவல்காரர்கள் கேள்வியொன்றும் கேட்காமல் அவனை உள்ளே விடுத்தார்கள். டேராவுக்குள் வந்ததும் பகல்திருடன் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கட்டிலண்டையில் போய் உட்கார்ந்து, "காதலா, நல்ல தூக்கமா?" என்று ஸர்தாரைத் தட்டியெழுப்பினான். ஸர்தார் எழுந்து, "ஏன் இங்கே வந்தாய், துஷ்டை?" என்று ஓரடி அடித்தான்.

அடி விழுந்ததும் பகல்திருடன் "உன்னைக் காதலித்து எவ்வளவோ அபேக்ஷையுடன் மானத்தைக்கூடப் பார்க்காமல் இங்கே வந்ததற்கு நல்ல பலன் கிடைத்தது. என்னைப் பரிவுடன் அழைப்பதற்குப் பதிலாக என்னை அடித்து என் முக்தா ஹாரத்தை அறுத்துப் போட்டாயே. இது உனக்குத் தருமமாகுமா?" என்று சொல்லிக்கொண்டே, கீழே குனிந்து முத்துக்களைத் தேடும் பாவனையாக அஸ்திகளையெல்லாம் பொறுக்கியெடுத்துக்கொண்டு முணுமுணுத்தபடியே வெளியே வந்துவிட்டான். வழியில் வேஷத்தைக் களைந்துவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். மறுநாள் உதயம் ஸர்தார் ராஜாஸபைக்குப் போகும்போது ராத்திரி தான் அடித்துத்துரத்திய தன் தாஸியிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று வழியிலுள்ள தன் வேசை வீட்டுக்குள் நுழைந்து, "உன்னை ராத்திரி ஏதோ அவஸரப்பட்டு அடித்துவிட்டேன்; அதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டாம்" என்று ப்ரார்த்தித்தான். அதைக்கேட்டு அந்த விலைமாது, "இது என்ன விந்தை!" என்று அச்சர்யப்பட, ஸர்தார் தான் மோசப்போனதை அறிந்து முகம் வெளுத்தான். பிறகு மனோவேதனையுடன் ராஜஸமுகம் சென்றான். ராஜா கட்டளைப்படித் திருடனைப் பிடிக்கப்போன இடத்தில் கூட(அதுவும் சுடுகாடு.) ஸர்தார், தன் தாஸியை அழைத்துவந்ததைக்கண்டு கோபமுற்ற சேவகர்களுள் ஒருவன், ஸர்தாருக்கு முன்னமே அரமனைசென்று ராஜாவிடம் ஸங்கதிகளையெல்லாம் சொல்லிவிட்டான். ஸர்தாரும் யதார்த்தத்தை வெளியிட்டான். ஸபையிலுள்ளோர் தாஸிவேஷந் தரித்துவந்தவன் திருடன்மகனே என்று தீர்மானித்தார்கள்.

மஹாராஜா மந்த்ரியைப் பார்த்து, "அந்தத் திருடனைப் பிடிப்பது இந்த ஸர்தார்களால் ஸாத்தியமான கார்யமன்று. நீதான் அத்தொழிலுக்குத் தகுந்தவன். உன்னால்தான் அக்கார்யம் ஆகவேண்டும் இன்றைக்கு. அவன் அந்த அஸ்தியை ஏரி, குளம் எதிலாவது போட்டுவிட்டுப்போக வருவான். அப்போது நீ ஜாக்ரதையாயிருந்து அவனைப் பிடித்துவரவேண்டும்" என்று ஆஞ்ஞை செய்தார். அதைக் கேட்டு மந்திரி, 'அப்படியே பிடித்துவருகிறேன்' எனச் சொல்லிப்போனான். மந்திரி ஒருபக்கமாய்ப் போகப் பகல் திருடனும் இன்னொரு பக்கமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

உடனே மந்திரி சென்று ஒற்றர்களைவிளித்து 'ஊரில் ஒரு குளத்தில்கூட மனிதர்களை இறங்க வொட்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று ஏவினான். வீட்டுக்குச்சென்ற பகல்திருடன் தாயாரைப்பார்த்து, "இன்றையதினம் நீ பிச்சைக்காரிபோல் வேஷம் போட்டுக்கொண்டு யாராவது கேட்டால் பண்டாரமென்று சொல்லிக் கோயில் நடைவாவிக் கரையில் சமைத்துக் கொண்டிரு. நான் என் தகப்பனார் அஸ்தியை நன்றாய்ப் பொடிசெய்து ஜலத்தில் குழைத்து விபூதியைப்போல் உடம்பு முழுவதும் பூசிக் கொண்டு, பைத்யக்காரனைப்போல்; கூச்சலிட்டுக் கொண்டு அவ்விடம் வந்து சற்றுநேரம் இருக்கு

மங்குமோடிக் கடைசியில் குளத்தில் விழுகிறேன். அப்போது, ஐயோ! மகனே! என்று அடித்துக்கொண்டு இலையில் போட்ட அன்னத்தை அங்கேயே வைத்துவிட்டு ஜலத்தண்டை வா. அதற்குள் காவற்காரர்கள் என்னைக் கரையிலிழுத்துப் போடுவார்கள். நான் அதிகமாய்க் களைத்தவனைப்போல் பாசாங்குசெய்கிறேன். அப்போது நீ 'அப்பா, சிறிது அன்னம் சாப்பிடு; களை தீரும்' என்று என்னைக் கூப்பிடு; அதற்குள் அந்த அன்னத்தையெல்லாம் காக்கைகள் சாப்பிட்டுவிடுமாதலால், காக்கையின் உச்சிஷ்டத்தை (எச்சிலை) எனக்குப் போடவருகிறாயா? என்று நான் உன்னை அடிக்கிறேன். நீ அடிபொறுதவனைப்போல் இங்கு மங்குமோடிக் கால்தவறியதுபோல் குளத்தில் விழுந்து கைவளையல்களைப் படிகளில் மோதியுடைத்துத் திருமங்கல்யத்தையும் அறுத்தெறிந்து நன்றாய் ஸ்நானஞ்செய்துவிடு. காவல்காரர்கள் வந்து உன்னையும் வெளியே எடுத்துப் பொடுவார்கள். பிற்பாடு நீ யொருவழியாகவும், நான் வேறு வழியாகவும் சென்று வீட்டை அடைவோம்" என்று சொன்னான். அதைக் கேட்டு ஸுகுணவதி அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டாள். பிறகு தாயாரும் பிள்ளையும் ஏற்பாடு செய்துகொண்டபடியே எல்லாவற்றையும் நடத்தி முடித்தார்கள். அவர்களுக்கு யாதொரு விக்னமும் ஏற்படவில்லை. காவலர்களாவது மந்திரியாவது அவர்களைக் கண்டு எவ்வித ஸந்தேஹமும் படவில்லை. வீட்டுக்குப் போன பகல்திருடன் உடனே வேஷத்தை மாற்றி ராஜஸபைக்கேற்ற உடைதரித்து அரண்மனை சென்றான்.

மந்திரி ராஜஸமுகம் வந்து பிச்சைக்காரர்களைத் தவிர வேறெவரும் குளத்தண்டை வரவில்லையென்று அந்தப் பிச்சைக்காரர்களுடைய கதையை ராஜாவிடம் சொன்னான். அப்போது அரசன் "ஐயோ! பைத்தியக்காரா! அந்தப் பிச்சைக்காரனே திருடன் மகன். அந்த ஸ்திரீ திருடனுடைய மனைவி" என்று சொல்ல, எல்லோரும் வெண் தாமரையாய் முகம் வெளுத்தார்கள். பிறகு, அரசன் மேலே நடந்ததைப்பற்றி விசாரிப்பதில் பயனொன்றுமில்லையென்று தீர்ந்து, மேலே நடக்க வேண்டியதைப்பற்றி யோசித்து, 'அவன் தன் தகப்பனுடைய ஆத்மா த்ருப்தியடையும் பொருட்டாக ப்ராமணர்களுக்குத் தான தர்மங்கள் செய்வானாதலால்; ஸம்பாவனை பெற்று வரும் ப்ராஹ்மணர்களை விசாரித்தால் அவனுடைய வீடு தெரியக்கூடும்' என்று சொல்ல, மந்திரி அப்படியே செய்கிறேன் என்று கூறிச் சேவகர்களைப்பார்த்து ஜாக்ரதையாயிருங்களென எச்சரித்தான்.

அன்றைய தினம் காசியிலிருந்து வந்த நூறு ப்ராஹ்மணர்கள் அந்நகரில் ஒரு ஸத்திரத்தில் யிருந்தனர். அதைக் கேட்டுப் பகல் திருடன் அன்றிரவு அவர்களனைவரையும் மறுபடியும் தெரிந்துகொள்ள ஸாத்யப்படாத சந்து பொந்துகள் மார்க்கமாய்த் தன் வீட்டுக்கழைத்து வந்து ஸமஸ்த தானங்களையும் சிறப்பாய்ச் செய்து, அவர்களை அதிக ஸந்தோஷப்படுத்தி, எல்லாம் முடிந்தபிறகு, மறுபடியும் அந்த ப்ராஹ்மணர்களை வந்ததுபோலவே கண்டுகொள்ள முடியாத மூலைமுடுக்கு வழியாயெல்லாம் அழைத்துப்போய் ஸத்திரத்தில் சேர்த்துவிட்டான். அந்த விப்ரர்களுடைய வருகையை யெதிர்பார்த்துக்கொண்டு ஸத்ர வாயிலில் காத்திருந்த காவலாளிகள் அவர்களை ஸமாசாரம் விசாரிக்க, அதற்கு அவர்கள் ஒரு தனிகன் தன் பிதா ச்ராத்தார்த்தமாய்த் தங்களுக்குப் பெரிய பெரிய தானங்கள் செய்தானென்று சொன்னார்கள். அவர்கள் அத்தனிகன் வீட்டைக் காண்பிப்பீர்களாவென, அதற்கு அவர்கள் "அவன் எங்களைக் கோணல் மார்க்கமெல்லாம் அழைத்துப்போய் மறுபடியும் அவ்வாறே இங்கே கொண்டுவந்துவிட்டான். நாங்கள் இவ்வூருக்குப் புதியவர்கள். ஆதலால், நாங்கள் அந்தவீட்டை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது". சேவகர்கள் இவற்றையெல்லாம் மந்த்ரிக்குத் தெரிவித்தனர். உடனே அவன் 'நேரில் வந்து

ப்ராஹ்மணர்களைப் பார்த்து, "ஸ்வாமிகளே, ராஜா உங்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பார்; சொல்லுங்கள்" எனக் கேட்டார். "யார் கேட்டாலென்ன? எவ்வளவு தனந்தான் வருவதாயிருந்தாலென்ன? தெரிந்தால்தானே சொல்ல முடியும்? தெரியாவிட்டால் என்ன செய்வது?"

மந்திரி வாயினின்று இவற்றையெல்லாம் கேட்டறிந்த அரசன், "நீங்கள் கையாலாகாதவர்கள். நான் போய்ப் பிடித்துக்கொண்டுவருகிறேன்" எனக் கூறிப் பட்டணத்துக்கு வெளியில் அன்றிரவு டேரா போட்டுக்கொண்டு, எண்ணிறந்த மெய்க்காப்பாளர்கள் சூழ, நவரத்ன கசிதமான கட்டிலின்மீது படுத்திருந்தான். இதையெல்லாம் உணர்ந்த பகல்திருடன், ராஜசேவகன்வேஷந்தரித்து அரசனண்டை சென்று, "மஹாராஜ், அந்தத் திருடன். நாலைந்து கூட்டாளிகளுடன் கொஞ்சதூரத்திலுள்ள ஏரிகரையின் பக்கமாய் ஒரு புதரில் ஒளிந்திருக்கிறான். தாங்கள் தத்க்ஷணமே புறப்பட்டுவந்தால், அவனைப் பிடித்துவிடலாம்" என்று சொன்னான். உடனே அரசன் எழுந்து ஒற்றர்கள், காவலர்களை உடன் அழைத்துக்கொண்டு வெகு துரிதமாய் நடந்து சென்றான். பகல்திருடன் சிறிது தூரம் அவர்களுடன் சென்று ஸரியான ஸமயம் பார்த்து அவர்களை ஏமாற்றிவிட்டு, வேறுவழியாய் அரசனது டேராவுக்குத் திரும்பிவந்து, கட்டிலினுடைய நான்கு பவழக்கால்களையும் உடைத்து எடுத்துக்கொண்டு கம்பிநீட்டினான். அரசன் போனவன் ஏரிகரையை யடைந்து புதரிலுள்ள மனிதர்களைப் பிடித்துக்கொண்டு விளக்கொளியில் வந்து பார்க்கும்போது, அவர்கள் தன் வீரர்களாயிருத்தலைக் கண்டு ஆச்சர்யமடைந்து, மறுபடி திரும்பிக் கூடாரத்துக்கு வந்து கட்டில் கால்களொடிந்து நிலத்தின்மேல் விழுந்து கிடப்பதைக் கண்டான். தன்னைக்கூட ஏமாற்றிவிட்ட அந்தத் திருடனைக் கண்டுபிடிப்பது மனுஷ்ய ப்ரயத்னத்தால் கூடாத கார்யமென்றெண்ணி, தலைமேல் கைவைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். இத்தனை மனிதர்களை ஏமாற்றித் தன் கார்யத்தை ஸாதித்த அந்தத் திருடன் அல்பஸ்வல்பமானவல்லனென்று துணிந்து, இனி அவனுடன் ஸ்நேஹஞ் செய்துகொண்டாலொழிய, தன் ராஜ்யம் நிலைநிற்காதெனப் பயந்து, அந்தத்திருடன் எவனோ அவன் நேரில் வந்தால், அவனுக்குத் தன் மகளை மணம்புரிவித்துப் பாதி ராஜ்யத்துக்குப் பட்டாபிஷேகம் செய்துவைப்பதாகப் பறையறைவித்தான்.

அதைக்கேட்டுப் பகல்திருடன் ராஜஸமுகஞ் சென்று, "நானே அந்தத் திருடன்" என்று ஒத்துக்கொண்டான். "ஆதி முதற்கொண்டு உன் வரலாற்றை எடுத்துரைக்கவேண்டும்" என்று அரசன் கூற, பகல்திருடன், அவற்றையெல்லாம் ஸாங்கோபாங்கமாய் எடுத்துச் சொன்னான். மஹாராஜா பகல்திருடனுடைய முகத்தில் ஜ்வலிக்கும் தேஜஸையும் அவனது முகக்களையையுங்கண்டு த்ருப்தியடைந்து, தன் புத்திரியைக் கொடுத்துக் கல்யாணம் செய்வித்து, பாதி ராஜ்யமும் கொடுத்தான். பகல்திருடனும், தன் குலத்துத் தொழிலை விட்டுவிட்டு நீதியாய் ராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு, தன் மனைவியுடன் ஸுகமாய் வாழ்ந்திருந்தான். ஸுகுணவதியும் தன் மகனுக்கு வந்த பதவியைக் கண்டு ஆனந்தமடைந்து, அந்த ஆனந்தத்தில் பர்த்தா இறந்ததால் உண்டாகிய சோகத்தை மறந்திருந்தாள்.

## சீதை வனம்புகுந்த சரிதம்.

கம்பராமாயணத்தில் இறுதியிலிருப்பதும், உத்தமகவியாகிய ஒட்டக்கூத்தப் புலவர்பாடியருளிய உத்தரகாண்டத்தில் உள்ளதுமான "சீதை வனம்புகு படலம்" என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளியவசனநடையில் வெளியிடும் நூல்; ஒன்பது சுவைகளில் மிகுநலம்பெறுவிக்கும் கருணாரஸம் அல்லது சோகரஸத்தை உண்டாக்குவது.

விலை அணா 3. தபாற்செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

வேலூர். (தென்னிந்தியா.)

## Selections.

## விசேஷத்திரட்டு.

### HOW TO PREVENT COLD.

### ஜலதோஷத்தைத் தடுக்கும் வகை.

ஜலதோஷம் இன்னதென்று அதை விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. ஸாதாரண ஜலதோஷம் சிறிது உண்டானதும், சிறுவர்களுடைய நாசியில் சளியென்னும் கபம் ஒழுகுவது முதலாக, தொண்டைவலியென்ன—மார்நோவென்ன—முகம் விம்மிச் சிரச்சூலை யேற்படுவதென்ன—அபரிமிதமான கபம் நெஞ்சில் தோய்ந்து ஜ்வரம் விருத்தியாவதென்ன இவையீறாகவுள்ள ஜலதோஷ ஸம்பந்தமான கோளாறுகளின் நிலைமைகள் அநேகமாய் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமேயாம். ஒரு ஜலதோஷத்தினல் ஏற்படும் தொண்டை வீக்கமும், தலைநோயும், இருமலும் பெரும்பாலும் எல்லா ஜனங்களாலும் வெகு ஸாமானியக் கோளாறுகளாகக் கருதப்பட்டுவந்தாலும், அக்கோளாறுகள் சற்றேறக்குறைய ஒட்டுவாரொட்டிகளென்று தற்காலத்திய ஆராய்ச்சிக்காரர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

"வெஸ்டர்ன் மெடிகல் டைம்ஸ்" என்கிற பத்திரிகையில் வெளியாயுள்ள ஒரு சிறிய வியாசத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"ஜலதோஷம் என்பது ஒரு ஸாமானியமான வியாதியன்று; அது ஒரு குடும்பத்தில் ஒருவரிடம் பற்றியதானல், அக்குடும்பத்தில் அனைவரையும் கிரமமாகத் தாக்குவதையும் நாம் கண்டிருக்கிறோம்; சில ஸமயம் ஊர் முழுவதிலும், நகரம் அனைத்திலுங்கூட அது வேகமாகப் பரவித் தீங்கிழைப்பதுண்டு; இவ்வியாதி இளங்குழந்தைகளையும், வாலிபர்களையும், வயதுசென்றவர்களையும், ஆண்களையும், பெண்களையும் பேதமின்றி வாதைசெய்யும் இயல்பினது; மனிதரைப் போல மிருகங்களையும் பீடிக்கும்; பள்ளிக்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும், பண்டசாலைகளிலும் ஜலதோஷ ஸம்பந்தமான தொற்றுவியாதி விரைவாகப் பரவிவிடும். ஸாமானியமான அற்ப ஜலதோஷம் அபிந்யாஸ ஜ்வரமாக (Pnumonia) மாறி பிராணபாயம் விளைவிப்பது எல்லா வைத்தியத் தொழிலாளிகளுக்கும் தெரிந்த விஷயமேயாம்".

தாடையின் உட்புற வீக்கங்கள்; தொண்டையிலுள்ள கிரந்திகளின் வீக்கங்கள், பல்நோய், காதுவலி, காதுகளில் சீ வடிதல்; ச்வாஸாசயக்கழலை, ஆமவாதம் என்னும் கீல்வாயு, இருதயத்தைப்பற்றிய கோளாறுகள், உடலில் உத்ஸாகம் குன்றிப்போய் ஜீவசக்தி மந்தமாய்விடுதல் என்னும் இத்தீங்குகள் யாவும் ஜலதோஷமாகும் நீராவியந்திரத்தைப் பின்தொடர்ந்தோடும் வண்டித்தொடர் எனக்கூடிய பெருவாரி வியாதிகள். ஆகவே, ஜலதோஷத்தை ஸாமான்யமானதாய் நினைத்து, அலக்ஷ்யஞ் செய்வது அபாயமாய் முடியும் என்பதை நினைப்பில் வைக்கவேண்டும்.

ஜலதோஷத்தைத் தடுப்பதற்கு முக்கியமாய், தேகத்தைத் தாக்கும் குளிர்ச்சி முதலியவற்றைத் தாங்கி,வெளியிருந்து உட்புகக்கூடிய தோஷங்களைத் தாக்கி நிற்பதற்குத் தகுந்தவாறு சரீரம் போதிய வன்மையைப் பெற்றிருக்க முதலில் கவனம் செலுத்தவேண்டும். அதாவது என்னவென்றால், சரீரமாகிற யந்திரத்தில் அடங்கிய எல்லாக் கருவிகளும் எப்பொழுதுமே ஒழுங்காக உழன்று அதனதன் வேலைகளைச் செய்துவரும்படி கவனிக்கவேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் சிறந்த போஷணையைத் தரக்கூடிய உணவை உட்கொள்ளுதல், போதியவளவு நன்கு நித்திரை செய்தல், தேஹதாதுக்கள் வீணில் சிதைவுறாவண்ணம் கவனித்தல், மலமூத்திராதிகளை உற்ற நேரங்களில் வெளியிடுதல், வீட்டுக்கு வெளியில் தினந்தோறும் சரியானபடி வியாயாமம் செய்தல், உடம்பு—வாய்—நாசி—கைகால்கள் முதலிய எல்லா அவயவங்களையும் நிர்மலமாக வைத்துக்கொள்ளுதல், வீடு—வாயில்களை முற்றிலும் அழுக்கில்லாமல் பரிசுத்தமாகச் செய்து அவற்றில் வஸித்துவருதல், வஸிக்கும் இடமும் உடுக்கும் உடைகளும் ஈரமில்லாமல் துர்நாற்றம் அணுகாமல் அவற்றைப் பாதுகாத்து வருதல் என்னும் இவையாவும் தேகாரோக்கியத்தை மிகவும் நல்ல ஸ்திதியில் வைத்துக் காப்பதற்கு இன்றியமையாதவைகள். சீதளமான காலங்களிலும், அத்தகைய பிரதேசங்களிலும் உஷ்ணத்தைக் காக்கும் உடைகள் அவசியமானவை.—வைத்தியகலாநிதி.

---

### SOME HINTS CONCERNING CHILDREN.

### குழந்தைகளைப்பற்றிய சில குறிப்புக்கள்.

சிசுக்கள் ஜனித்தவுடன் மலஜல துவாரங்கள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், சிற்சில குழந்தைகளுக்கு இத்துவாரங்கள் பிறக்கும்போது அடைப்பட்டு இருப்பதுண்டு. அப்-

படிக்கிருந்தால், உடனே அவைகளைச் சரியாக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால், வயிறு ஊதி, பொருமிக் கெடுதி நேரிடும். சாதாரணமாய்க் குழந்தைகள் பிறந்து கொஞ்சநேரத்திற்குள் மலஜலம் கழியும். முதலில் கழியும் மலம் கறுப்பு நிறமுள்ளதாயிருக்கும். குழந்தைகளுக்கு அடிக்கடி நீர் கழிவதுடன், பொதுவாய் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரத்திற்குக் குறையாமல் மஞ்சள் நிறமுள்ள நெகிழ்ந்த மலம் கழியும். குழந்தைகளுக்கு மலச்சிக்கு வரும்படி இடங்கொடுக்கக்கூடாது. குழந்தைகளுக்கு மலம் சிக்கிவிட்டால், எளிதில் மாந்தவலிப்பு வந்துவிடும். இஃது அபாயமுள்ள வியாதி. ஆகையால், இது வராமல் தடுத்துக்கொள்வதே நல்லது. தாயார் சௌக்கியமாயிருந்து, குழந்தைக்குத் தேவையான பால் உடையவளாயிருந்தால், குழந்தைக்கு மலச்சிக்கு ஏற்படுவது துர்லபம். அப்படி ஏற்பட்டாலும், அதை எளிதில் நிவிருத்தி செய்துவிடலாம். பெரியவர்களைப்போலவே, குழந்தைகளும் சுத்தமான தண்ணீர் உட்கொள்ளுவது அவசியம். அடிக்கடி அதாவது பால் கொடுக்கும் நேரங்களுக்கு மத்தியில், சுத்த ஜலம் கொடுப்பது நல்லது. கொஞ்சம் வயசான குழந்தைகளுக்கு ஆரஞ்சுப்பழரசம் கொடிமுந்திரிப்பழ ரஸம் முதலியவை இடையிடையே கொடுக்கலாம். தாயின் பாலிலேயே குழந்தைகளின் மலத்தைக் கட்டுவதற்கு உதவி செய்கிற ஸத்தை ஈசுவரன் அமைத்திருக்கிறார். ஆகையால், தாய்மாரே தங்களுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுவதுதான் கிரமம். தாய் அதிக நோயாளியாயிருந்தாலொழிய, தாய்ப்பாலை நிறுத்தி வேறு பால் கொடுக்கக்கூடாது. தாய்க்குப்போதுமான பால் ஏதாவது காரணத்தால் இல்லாவிட்டால், அதை விருத்தி செய்யவேண்டும், புஷ்டியான ஆகாரம் கொடுத்து, அது ஜீர்ணிக்கச்செய்துகொள்ளவேண்டும். பருத்திக்கொட்டையின் பால் (அல்லது பருத்திக்கொட்டையின் சத்தடங்கிய Lactogol என்னும் மருந்து) உதய சாயங்காலம் பசுவின் பாலுடன் கலந்து சாப்பிட்டால், தாய்க்குப் பாலுண்டாகும். குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கு அரைமணி நேரத்திற்கு முந்தியும் மேற்கூறிய மருந்தைச் சாப்பிடலாம். Malt extract கலந்த Codliver oil பால்விருத்தி செய்யப் பிரயோசனமுள்ளது. என்ன செய்தும், தாய்க்குப் பால் உண்டாகாவிட்டால், அல்லது தாய்க்கு நோயினால் பால் கொடுக்க முடியாவிட்டால், வேறு விதமான ஆகாரம் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படி ஏற்படுகிறது. இந்தக் கஷ்டம் ஏற்படும் குழந்தைகளுக்கு அநேக வியாதிகள் உண்டாகின்றன. இவைகளில் முக்கியமானவை: மாந்தம், வயிற்றுநோவு, புளிப்பு மலம், மலச்சிக்கு முதலியவை. இவைகள் வராமல் காக்கும் ஆகாரத்தைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது அவசியம். குழந்தைகளுக்கு முதல் மாஸங்களில் ½ மணி நேரத்திற்கொருதரமும், பின்பு 2-மணிக்கொருதரமும், பின் 3-மணிக்கொருதரமும் ஆகாரம் கொடுப்பது கிரமம். இதனால் ஏற்படும் விசேஷ சிரமத்தை உத்தேசித்து, அப்போதைக்கப்போது அடிக்கடி குழந்தைகளுக்கு ஆகாரம் தயார் செய்யும் சிரமத்தைக் குறைக்க, அநேகம் நவீன ஆகாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம் தாய்ப்பாலுக்குச் சமானமானவையென்று கூறப்படுகின்றன. இவைகளெல்லாம் கொஞ்சம் வயதான குழந்தைகளின் சரீரங்களுக்கிணங்கினாலும், பிறந்து இரண்டொரு மாஸக் குழந்தைகளுக்குச் சரிப்படுகிறதில்லை. இந்த ஆகாரங்கள் கெடாதவையாய்க் குழந்தைகளின் வயசுக்குத் தக்கபடி கிடைப்பதில் இருக்கிற சிரமத்தை உத்தேசித்து, அதிபாலியக் குழந்தைகளுக்கு இயற்கையாயுள்ள பால் கொடுப்பதே சிலாக்கியம். இரஸாயன சாஸ்திரப்படி ஆராய்ந்து பார்த்ததில், ஸ்திரீயின் பாலுக்கு அநேகமாய் ஒப்பிடக்கூடியது கழுதையின் பால் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சௌகரியமுள்ளவர்கள் புதிதாய்க் குட்டிபோட்ட கழுதையை நன்றாய்க் குளிப்பாட்டி வீட்டில் வைத்து நல்ல உணவு கொடுத்துவந்து, அதன் பாலைக் கறந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் மிகவும் நல்லது. இது முடியாவிடின், சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய பசுவின் பாலைத்தான் கொடுக்கவேண்டும். ஆனால், குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்களுக்குப் பிண்ணாக்கு முதலிய கொழுப்புள்ள ஆகாரம் கொடுக்கக்கூடாது. புல், வைக்கோல், பருத்திக்கொட்டை, தவிடு இவைகளை போடவேண்டும். பசுவின் பாலைக் காய்ச்சி ஆடையை எடுத்துவிட்டு வயசுக்குத்தகுந்தபடி சரிபங்கு, அல்லது இரண்டுபங்கு வெந்நீர் கலந்து கொஞ்சம் சீனி சேர்த்துக் கொடுக்கவேண்டும். ஏதாவது ஓர் ஆகாரம் குழந்தையின் வயிற்றுக்குத் தக்கபடி கொடுக்கிறதென்று தீர்மானித்த பிறகு, அதை எப்படிக் கொடுப்பது என்ற கேள்வி உண்டாகிறது. இந்நாளில் பால்கொடுக்கும் புட்டிகளும், அவற்றிற்கு ரப்பர் காம்புகளும் ஸகாயமாய் விற்கின்றன. ஆகையால், அநேகர் இவைகளின் மூலமாய்க் குழந்தைகளுக்குப் பால் ஊட்டுகிறார்கள். மேலும், பால்பாட்டிலில், பாலை யடைத்துக் குழந்தையைச் சாப்பிடவிட்டுவிட்டு, தங்கள் வேலையைப் பார்க்கச் சௌகரியமிருக்கிறதென்று நினைக்கிறார்கள். இப்படிப்

பால் கொடுப்பதில் அநேகம் கெடுதல்கள் இருக்கின்றன. எவ்வளவு சுத்தம் செய்தாலும், இந்தப் பாட்டில்களையும் ரப்பர்களையும் இருக்கவேண்டிய அளவு சுத்தமாய்வைத்துக்கொள்ளுவது வெகுவாய் அசாத்தியமென்றே சொல்லலாம். பாட்டிலின் சுத்தக்குறைவால் அநேக வயிற்றுவியாதிகள் உண்டாகின்றன. ரப்பரைச் சப்புவதனால் சில பல்வியாதிகள் உண்டாகின்றன. இவ்விஷயங்களில் வெகுகால அனுபவமுள்ள ஐரோப்பிய வைத்தியநிபுணர்கள், மூடியுள்ள பெட்டிகளையும் ரப்பர் காம்புகளையும் உபயோகிக்கக் கூடாதென்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். உலோகத்தினால் செய்த திறந்த மூக்குள்ள பாலடைகளே சிலாக்கியமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, நம்முடைய முன்னோர்கள் உபயோகித்துவந்த வெள்ளி வெண்கலப் பாலடைகளே சிலாக்கியம் என்று தெரிகிறது. ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்தால், இப்படித்தான் ஏற்படுகிறது. இது நம்முடைய வாலிபர்கள் கவனிக்கத்தக்கது. உலோகத்தால் செய்த பாலடைகளை நெருப்பில் காய்ச்சலாம் அப்படிச் செய்வதனால் எல்லாவிதக் களங்கங்களும் நசித்துப் பாலடை சுத்தமாய்விடும்; இப்படிச் சுத்தம்செய்வது எளிது. எவ்வளவு ஜாக்கிரதையோடிருந்தாலும், எவ்விதம் பாலடைகள் உபயோகித்தாலும், எந்த ஆகாரத்தைக் கொடுத்தாலும், தாய்ப்பால் மாத்திரமே சாப்பிட்டுவந்தாலுங்கூட, குழந்தைகளுக்கு மலச்சிக்கு ஏற்படுவது சகஜம். ஆகையால், ஸாதாரணமாய் ஒரு நாளைக்கு இரண்டுமூன்று தரம் மலம் கிரமப்படி கழிந்தாலொழிய, ஏதாவது மருந்து கொடுக்கவேண்டியது அவசியமாகிறது. இதற்கு, தினந்தினமோ, ஒருநாள் விட்டொருநாளோ, வாரத்திக்கு இரண்டு தடவையோ அவசியம் ஏற்படுகிறது போல, காலையில் கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் கொடுத்துவரும் வழக்கம் நல்லதென்று நிதானிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆமணக்கெண்ணெய் கொடுப்பதனால், பின்பு மலச்சிக்கு ஏற்படுகிறபடியால் அதை வழக்கமாய்க் கொடுக்கக்கூடாதென்று சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு. இதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை; ஆமணக்கெண்ணெய் அடிக்கடி கொடுப்பதால் ஏற்படுகிற கெடுதலைவிட அதை உபயோகியாமல் உண்டாகிற கெடுதல்கள் அதிகம் என்று தீர்மானமாய்ச் சொல்லலாம். ஒரு மாஸத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் கொடுத்துவருவதுடன், அத்திப்பழ ஷர்பத், ஆரஞ்சு ஷர்பத், முந்திரிப்பழ ரஸம் இவைகளைக் கொடுப்பது நல்லது. பாரம்பரிய வழக்கத்தால் சில குழந்தைகளுக்கு மலச்சிக்கு ஏற்படும். இந்தச் சிக்குகளுக்கு மேற்சொல்லிய சிகித்சைகள் தவிர, தினம் இரண்டுதரம் (உதய சாயங்காலம்) வயிற்றை லேசாய் அமுக்கவாவது, பிசையவாவது, விரல் நுனிகளால் குத்தவாவது செய்வது பிரயோஜனப்படும். இப்படி 5 நிமிஷம் முதல் 15 நிமிஷம் வரை செய்யவேண்டும்: பிரதக்ஷிணமாய், அதாவது கடியாரத்தின் கை போவது போல் செய்யவேண்டும். இதைச் செய்யும் விதம் தெரிந்தவர்களிடத்தில் எளிதில் கற்றுக்கொள்ளலாம். இப்படிச் செய்வதனால், வயிற்றின் நரம்புகள் தசைகளெல்லாம் பலமடைந்து மலச்சிக்கு நிவிருத்தியாய் விடுகிறது. ஒருவயசுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மலச்சிக்குண்டானால், தேன், நெய், வாழைப்பழம், மேற்சொல்லிய பழ ரஸங்கள், ஷர்பத்துகள் முதலியவற்றை உபயோகிப்பதுடன், ரஸமுதலியவை கலவாத கஸ்தூரி முதலியவை கலந்துள்ள மாத்திரைகளை வைத்தியர்களிடமிருந்து வாங்கிவைத்து அவசியம்போல் உபயோகிக்கலாம். மற்ற மருந்துகளையுஞ் சிகித்ஸைகளையும் வைத்தியர்கள் அனுமதியின்றி உபயோகிக்கக் கூடாது.—தமிழர் நேசன்.

---

## TUBERCULOSIS OF CATTLE.

### மாடுகளுக்கு வரும் க்ஷயம்.

ட்யூபர்குலாஸிஸ் என்று சொல்லப்பட்ட க்ஷயம் அல்லது எலும்புருக்கி நோய் எல்லாவகை மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் பக்ஷிகளுக்கும் வரக்கூடிய ஒரு தொற்றுவியாதி. ஆனால் வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு வருவது அபூர்வம். இந்த வியாதி நமது தேசத்தில் கால்நடைகளுக்கு ஸகஜமல்லவென்றாலும், கட்டிப்போட்டிருக்கும் மாட்டுமந்தைகளில் இந்த வியாதி வந்ததுண்டு. முக்கியமாக கறவை மாடுகளுக்குத்தான் இது அதிகமாக வருகிறது. பட்டணங்களில் மாடுகளை ஸுகாதாரமில்லாத கொட்டில்களில் கட்டி வருவதால், அவைகளின்மூலமாக க்ஷயரோகம் பரவக்கூடும். இதனால் மாடுகளுக்குள்மாத்திரம் க்ஷயரோகம் பரவி, அவைகள் இறக்குமென்பதில்லை; நோய்ப்பட்ட மாடுகளிலிருந்து கிடைக்கும் பால்மூலமாக மனிதர்களிடமும் இந்த வியாதி பரவக்கூடும். இந்த வியாதியானது நோயடைந்த மிருகங்களின் மலஜலங்களிலும் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வெளிவரும் திரவங்களிலும் உள்ள ஒருவகை கிருமியால் உண்டாகிறது. இந்த கிருமி கொட்டில்களிலுள்ள அசுத்தங்களிலும், புல், வைக்கோல் முதலிய தீவனப் பொருள்களிலும், ஜலத்திலும் சேர்ந்துகொண்டு வியாதியைப் பரவச் செய்கின்றன. கிருமிகள் காற்றோடு சேர்ந்துகொண்டும் வியாதியைப் பரவச்செய்யும். வியாதிக்கிருமிகளுள்ள

காற்றை சுவாஸிப்பதனாலும், அவைகள் சேர்ந்துள்ள தீனி, ஜலம் இவற்றை உட்கொள்ளுவதனாலும், வியாதிக்கிருமிகள் ரத்தத்தில் சேருவதனாலும், மாடுகள் பொலிவதனாலும் வியாதி பரவும். வியாதி பரவுவதற்கு ஈரமும் குளிர்ச்சியும் ஸுகாதாரக்குறைவும் ஸாதகமாக இருக்கின்றன. வியாதிக்கிருமி தேகத்தில் சேர்ந்து வியாதி வெளிப்படையாகத் தோன்ற 10-நாள் முதல் பலவாரங்கள் வரையில் செல்லும்.

### வியாதியின் அறிகுறிகள்.

கால்நடைகளுக்கு வரும் இந்த வியாதியின் அறிகுறிகள் பின்வருவனவாகும்:— அநேகமாக மாடுகளின் நுரையீரல்தான் முக்கியமாகப் பாதகமடையும். முதலில் வெளிப்படையாகத் தெரியும் அறிகுறி என்னவென்றால், மிகவும் பலஹீனமாகச் சிறு இருமல் இருமுவதாகும். மாடு வேலைசெய்து ஜலம் குடித்தபிறகு இருமல் கடுமையாக இருக்கும். மாடு மூச்சுவிடமுடியாமல் கஷ்டப்படும். இரைப்பையிலும் குடலிலும் வாயு நிரம்பியிருக்கும். உடம்பு மிகவும் இளைத்துப் போகும். கண்கள் குழிந்துபோகும். பிறகு மாடு அடிக்கடி இரும ஆரம்பிக்கும். மூச்சு விடுவது இன்னும் கஷ்டமாகும்: பிறகு இந்த வியாதி ந்யூமோனியா என்னும் நோயாக மாறி மாடு இறந்துபோகும்.

க்ஷயரோகத்தில் குடல் கெடுதலடையக்கூடும். அப்போது அடிவயிற்றில் நோவு இருப்பதாகத் தெரியும். பிறகு அதிஸாரம் உண்டாகி, மாடு நாளுக்குநாள் இளைத்துப்போகும். மாட்டின் மடியும் கெடுதலடைவதுண்டு. அது முழுவதுமோ அல்லது அதன் ஒரு பாகமோ வீக்கமடையும். வீங்கின பாகம் கெட்டியாகவும் வலியில்லாமலும் இருக்கும். முதலில் பால் ஜலம் கலந்ததாக இருக்கும்; பிறகு மஞ்சளாகவும் குறைவாகவும் போகும். மாட்டின் மூளை கெட்டுப்போயிருந்தால், விசேஷ மனக்கிளர்ச்சியும், பார்வைக் குறைவும், வலிப்பும் உண்டாகலாம். மாட்டின் எலும்புகளும், மூட்டுக்களும் கெடுதலடைவதுண்டு.

ஸாதாரணமாக சோதித்துப் பார்ப்பதனாலேயே வியாதி இருப்பதும் இல்லாததும் தெரிவது கஷ்டம். கால்நடை வைத்தியர்கள் ட்யூபர்குலின் என்னும் மருந்தை இன்ஜெக்ட் செய்து வியாதி உண்டா இல்லையா என்று கண்டுபிடித்துவிடுவார்கள். வியாதி இல்லையானால், மருந்து இன்ஜெக்ட் செய்வதால் மாட்டுக்குக் கெடுதி ஒன்றும் ஏற்படாது. வியாதி இருந்தாலோ அந்த மருந்து சில கோளாறுகளை உண்டாக்கிவிடும்

### சிகித்ஸை.

இந்த வியாதிக்குச் சிகித்ஸை செய்வதிற் பிரயோஜனமில்லை. வியாதியானது அநேகமாய் ஸ்வஸ்தமாவதில்லை. மேலும், அவைகளால் இதர மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் இந்த வியாதி பரவக்கூடுமாகையால், வியாதி இருப்பது தெரிந்தவுடனே மாடுகளை ஒழித்துவிடுவது நல்லது என்று சொல்லப்படுகின்றது.

### வியாதி வராமல் தடுத்தல்.

வியாதி உள்ள மிருகங்களை யெல்லாம் தனியாக அப்புறப்படுத்தவேணும். வியாதி உண்டென்று ஸந்தேகித்த மாடுகளின் தேகத்தில் டுபர்குலின் என்னும் மருந்தை இஞ்செக்ட்செய்து, வியாதி உண்டா இல்லையா என்று நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். எந்தப் பிரதேசத்திலாவது இந்த க்ஷயரோகம் தோன்றினால், தக்க வைத்தியர்களின் உதவியைக்கொண்டு இதைப் பரவவிடாமல் செய்யவேண்டும். கொட்டில்களை நல்ல காற்றோட்டமும் சுத்தமுமுள்ளவையாக வைத்து, மாடுகளின் ஸுகாதாரத்துக்குக் குறைவில்லாதபடி பார்த்துவந்தால், வியாதியைத் தடுப்பது சுலபமாகும். அதோடு, வியாதியுள்ள மாடு கொட்டில்களுக்குள் வாராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.—ஜனாபிமானி.

---

## GOOD ADVICE.
### நற்போதனை.

1. மன உத்ஸாக முள்ளவனே மன்னவன்.

2. பணம் என்பது நல்ல வேலைக்காரன்; ஆனால் கெட்ட யஜமானன்.

3. அதிகம் படி; அநேகவற்றைப் படியாதே.

4. பட்டினியாய்ப் படுத்துறங்கு; கடன்காரனாய்த் துயிலெழாதே.

5. முகத்தையும் வெளித் தோற்றத்தையும் கொண்டு ஒரு மனிதனை மதிப்பது, மேலட்டையைக் கொண்டு ஒரு புஸ்தகத்தின் யோக்கியதையை மதிப்பிடுவது போலாகும்.

6 அதிகாரமும் அந்தஸ்துமுள்ள ஒருவனுக்கு இனாம் கொடுப்பது வண்மையல்ல, வியாபாரமே.

7 மன ஸந்தோஷத்தை விளைக்கும் கருவிகளில் புஸ்தகங்களே முதலாவன; ஒரு நண்பனைப் போலாது, புஸ்தகங்கள், நம்முடைய சௌகரியத்தையும் சாவகாசத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும்

8. பாலியத்தில் பவுன்களைக்கொண்டு விளையாடுபவன் வயோதிகத்தில் பைசாக்களுக்குப் பிச்சை யெடுப்பான்.—தமிழர் நேசன்.

## The Progress of the world.

## பிரபஞ்சப் போக்கு.

**இந்தியாவின் தோல் வியாபாரம்.**

இந்த மகா யுத்தத்திற்கு முன்னே இந்தியாவின் தோல் வியாபாரமானது பெரும்பாலும் ஜெர்மானியரிடமே இருந்தது. அவர்களே இந்த வியாபாரத்தை ஏகபோகமாய் ஆண்டு அனுபவித்து வந்தார்கள். இனி, இந்த வியாபாரத்தில் யார் ஆதிக்கியம் பெறுவார்களென்பது பிறகுதான் தெரியவேண்டும். எனினும், இப்போதே இங்கிலாந்தில் பல வியாபாரிகள் அவ்வியாபாரத்தில் கண்வைத்திருக்கிறார்களென்று தெரிகின்றது. ஸமீபத்திலே லண்டனில் சில வியாபாரிகளின் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அப்போது ஸர் ஹென்றி லெட்கார்டு என்பவர், ப்ரிட்டிஷ் வியாபாரிகளுக்கே இந்த வியாபாரத்தில் ஏகபோக அனுபவமிருக்கவேண்டுமென்று கூறினார். இந்தியாவிலே ஏராளமாகக் கிடைக்கும் தோல்களின் வியாபாரமானது இந்தியர்களுக்கே இருக்கவேண்டுமென்பதை அவர் சற்றும் கவனிக்கவில்லை. ஆகையால், இந்தியாவின் தோல் வியாபாரத்தை ஏகபோகமாய் ஆண்டு அனுபவிக்க இங்கிலாந்தில் பலர் கண்ணுங்கருத்துமாய் இருக்கிறார்களென்பதை இந்தியர்கள் உணர்ந்து, பிறகு கவனிப்போமென்றிராமல் தக்கது செய்யக் கோருகிறோம்.

**கூலிப்படையில் இந்தியரின் சம்பளம்.**

ப்ரான்ஸில், பற்பல தேசங்களினின்றும் திரட்டப்பட்ட கூலிப்படையினர் வேலைசெய்து வருகின்றனர். இந்தியர்களடங்கிய கூலிப்படையும் அங்கே இருக்கின்றது. அக்கூலிப் படைகளில் ஒவ்வொரு ஜாதியினரின் சம்பளம் என்னவென்று பார்லிமெண்டில் ஒரு கேள்வி பிறந்தது. அப்போது கிடைத்த பதிலில் சொல்லியுள்ளபடி அந்தந்த ஜாதியினருக்குக் கிடைக்கும் தினச்சம்பளம் வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| ப்ரிட்டிஷ் கூலிப்படை ஆளுக்கு | ரூ. | 2 | 15 | 0 |
| தென் ஆப்பிரிகா வாசி | ,, | 1 | 14 | 0 |
| ஈஜிப்ட் தேசத்தவன் | ,, | 1 | 4 | 0 |
| சீன தேசத்தவன் | ,, | 1 | 0 | 0 |
| பீஜித்தீவு வாசி | ,, | 0 | 12 | 0 |
| இந்தியன் | ,, | 0 | 11 | 0 |

மேலே குறிப்பிட்டிருக்கும் புள்ளிகளைப் பார்த்தால், இந்தியருக்கே மிகவும் குறைவான சம்பளமெனத் தெரியவரும். இவ்வித வித்தியாசம் ஏன்? மற்றவர்களுக்குள் இந்தியர்கள் எந்த அம்சத்தில் குறைந்தவர்கள் என்பதை நாம் அறிய விரும்புகிறோம்.

**டாடாவின் கைத்தொழில்பாங்கி.**

சாஸ்திரிய அபிவிருத்திக்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துத் தேச முற்போக்குக் கென்றே உழைத்துவரும் நமது ஜெம்ஸெட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடாவைப் பலரும் அறிவர். இவர் இத்தேசத்தில் பல பெரிய பெரிய தொழில்களைக் கோடிக்கணக்கான மூலதனத்தைக் கொண்டு நடத்திவருகிறார். கைத்தொழில் அபிவிருத்திக்குப் பணமே பிரதானமாதலால், கைத்தொழில் பாங்கி ஒன்று மிகவும் அவசியமென இவர் கருதி, "டாடா கைத்தொழில் பாங்கி" என்ற ஸ்தாபனமொன்றை ஸ்தாபிக்கலானார். இது பம்பாயில் இந்தியக் கம்பெனி சட்டபடி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலதனம் 12 கோடி ரூபாய். பங்குகளுள் பல லண்டனிலுள்ள சில பெரிய பணக்காரர்களால் எடுத்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படுகின்றது.

ஜெர்மனியானது பலதுறைகளிலும் இவ்வளவு முற்போக்கடைந்திருப்பது அதன் கைத்தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும்போதுமானவளவு சௌகரியங்கள் செய்துகொடுத்திருப்பதேயாம். அங்குத் தொழில்களை நன்கு

ஆதரிக்கப் பலவிடங்களிலும் கைத்தொழில் பாங்கிகள் போன்ற ஸ்தாபனங்கள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறே இங்கிலாந்திலும் ப்ரான்ஸிலும் ஏற்கெனவே உள்ள தொழில்களோடு இன்னும் பல புதியனவற்றையும் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களுக்கு உதவி செய்வதற்காக ஏராளமான மூலதனத்தைக்கொண்டு தொழில் பாங்கிகளை ஏற்படுத்தி, தேசமுழுவதிலும் கிளை ஸ்தாபனங்களையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

ஏராளமாகச் செல்வத்தையுடைய இங்கிலாந்து பிரான்ஸ் முதலான தேசங்களிலேயே தொழில் பாங்கிகளின் தேவை இவ்வாறு உணரப்படும்போது, பொருளாதார விஷயத்தில் மிகவும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளதாய், ஸகல விஷயங்களுக்கும் பிறநாடுகளையே எதிர்பார்த்து இருக்கின்ற இந்தியாவில் அவ்வித உணர்ச்சி எவ்வளவு இருக்கவேண்டுமென்பதை நாம் இங்குக்கூறவேண்டியதில்லை. இந்தியாவில் தொழில் செய்யப்படுவதற்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. இவையெல்லாம் இத்தேசத்திலேயே தொழில் செய்யப்படாமல் ஒவ்வொரு வருஷமும் பிற நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கு அவை கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இங்கு இறக்குமதி செய்யப்படுவதால், நாம் எவ்வளவு நஷ்டத்திற்குள்ளாகிறோமென்பதைப் பலரும் ஆழ்ந்து யோசிக்கவேண்டும்.



ஜே. என். டாடா.

இதுவரை இந்தியாவில் சில சிறுதொழில்களுக்குப் பண உதவிசெய்ய ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி போன்ற கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தனவேயன்றி, லட்சக் கணக்காய்ப் பண உதவிசெய்ய இண்டஸ்டிரியல் பாங்கிபோன்ற ஸ்தாபனங்கள் இருந்ததில்லை. மேற்படி கைத்தொழிற் பாங்கியை ஸர். வில்லியம் மேயர் திறந்து வைக்கும்போது, “இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தியில் நம் எல்லோருக்கும் சிரத்தையுண்டு. தொழில்கள் அபிவிருத்தியடைவதற்கு பாங்கிகள் மிகவும் அவசியம். இந்த பாங்கியானது சாதாரண பாங்கியைப்போலிருந்தால், யாதொரு பிரயோஜனத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது: பெரிய தொழில் முயற்சிகளுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டும். போட்ட மூலதனத்திற்கு உடனே பிரதி பிரயோஜனத்தை நாம் எதிர்பார்க்கக்கூடாது. பொறுமையோடிருந்து தொழில்களைச் சிறப்பாக நடத்திவந்தால், அவற்றிற்கு அபிவிருத்தி ஏற்படாமற் போகாது. இந்த பாங்கியானது மற்ற பாங்கிகளோடு போட்டி போடுவதற்கு ஸ்தாபிக்கப்பட்டதன்று. இதன் மூலதனம் பெரும்பாலும் இந்தியர்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரு முயற்சிக்கு டாடா கம்பெனியாரின் கியாதியும் ஊக்கமுமே முக்கிய காரணமென்பதையும், கவர்ன்மெண்டின் உதவியின்றியே இது ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது என்பதையும் கேட்டு நான் சந்தோஷிக்கிறேன்” என்று பேசினார். இந்த பாங்கியின் மூலதனத்திற்காக இதுவரை வசூலிக்கப்பட்டிருப்பது எழுபது லட்சம்

ரூபாய். பங்குக்காரர்களின் ரிஸர்வ் கடன்கள் ஆறுகோடி. இந்த பாங்கின் டைரெக்டர் போர்டில் பின்கண்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்: ஸர் டொராப்ஜே டாடா (சேர்மன்). ஸர் ஸஸூன் டேவிட், ஆர்.என். முக்கர்ஜி, ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்டூவர்ட், ஸர் ஸ்டான்லி ரீட், ஆனரபிள் மிஸ்டர் புருஷோத்தம்தாஸ் தாகூர் தாஸ், மெஸ்ஸர்ஸ் R. D. டாடா, F. E. தின்ஷா, F. C. ரிம்மிங்டன், நாரடம் மேரார்ஜி, ஹாஜி குலாம் முகம்மது ஆலம், எ. ஜே. பில்லி மோரியா. இந்த பாங்கின் ஆக்டிங் ஜனரல் மானேஜராக மிஸ்டர் ஜாஸ் மக்பீல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**புறக்கணிக்கப்பட்ட விஷயம்.**

பழமரஞ் செடிகளை வைத்து வளர்ப்பதும், காய்கறி பதார்த்தங்களை பயிர் செய்வதும் வியவசாயத்தில் முக்கியமான அம்சங்கள். இவற்றை வெகுவாக நமது தேசத்தவர்கள் அலக்ஷியம் செய்துவிட்டனர். இயற்கையாகவே நமது தேசத்தில் பழமரஞ் செடிகளையும் காய்கறி பதார்த்தங்களையும் பயிர் செய்வதற்குப் பல சௌகரியங்கள் உள்ளன. இத்தேசத்தில் பெரும்பாலாரும் காய்கறி சாப்பிடுபவர்களாகவிருந்தும், அத்துறைகளில் நம்மவர்கள் அலக்ஷியமாயிருப்பது மிகவும் ஆச்சரியமே. ஆனால், இவ்விஷயத்தில் அலக்ஷியமாயிருக்கக்கூடாதென மைசூர் சம்ஸ்தானவாசிகள் முன் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இவ்விஷயமாய்ச் செய்திருக்கும் ஏற்பாடுகளைப்பற்றி "கூட்டுத்தொழில் வர்த்தமானி" எழுதுவதாவது:—

மைசூர் ஸம்ஸ்தானத்திலுள்ள வியவசாயக் கமிடியார் மேற்கண்ட விஷயத்தில் சம்ஸ்தானமெங்கும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். பழமரஞ் செடிகொடி முதலிய பயிர்களில் கவனத்தைச் செலுத்துவதற்காக ஹார்டிகல்சரல் இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் அங்கே ஒரு ஜில்லாவில் சம்பளமின்றி வேலைபார்த்து வருகிறார். இதர ஜில்லாக்களிலே அந்தகைய ஸப் இன்ஸ்பெக்டர்கள் சம்பளம் பெற்று வேலை பார்த்து வருகிறார்கள். பழமரஞ்செடிகொடிகளை வைத்து வளர்ப்பதன் பலன் என்னவென்பதை அவர்கள் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, பழமரக்கன்றுகளைத் தேடிக்கொடுத்து அவைகளை நன்கு பராமரிக்கும் வகைகளையும் சுட்டிக் காட்டி வருகின்றனர். பழமரஞ் செடிகளைப் பயிரிடும் விதத்தைச் சொல்லிவைப்பதற்காக ஒரு வகுப்பை ஏற்படுத்தவேண்டுமென்று வியவசாயக் கமிடியார் சொன்னதன்மேல், அவ்வாறே ஒரு வகுப்பை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வகுப்பில் 12 மாணிட்டர்கள் கவர்ன்மெண்டிலிருந்து உபகாரச் சம்பளம் பெற்று பயிற்சியடைந்துவருகிறார்கள். ஆங்காங்குள்ள சபைகள் பழமரஞ் செடிகளை வைத்து வளர்க்க இஷ்டப்படின், அச்சபையாருக்கு மேற்படி வியவசாயக் கமிடியார் இனாமாய்க் கன்று செடிகளைக் கொடுத்து உதவுவதோடு, ஒரு இன்ஸ்பெக்டரையும் கொடுத்து உதவுகிறார்கள். பழமரஞ் செடிக் கன்றுகளை உண்டுபண்ணுவதற்கான தோட்டங்களை ஏற்படுத்தவும் சமஸ்தான கவர்ன்மெண்டார் உத்தேசங்கொண்டிருக்கிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்தால், இவ்விஷயமாய் மைசூர் ஸம்ஸ்தானத்தில் எவ்வளவு முற்போக்கு ஏற்பட்டிருக்கின்றதென்பது நன்கு விளங்கும். இவற்றை நமது ஜனத்தலைவர்கள் கவனித்துத் தக்கது செய்வார்களென நம்புகிறோம்.

**சென்னை இராஜதானியில் கரும்பு சாதுபடி.**

சென்னை இராஜதானியில் 1917-18-ம் வருஷத்தில் 108,410 ஏக்கர் நிலங்களில் கரும்பு சாகுபடி செய்யப்படுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், முந்திய வருஷத்தில் 95,770 ஏக்கர்களில்தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. அதாவது: 100-க்கு 13 வீதம் இப்போது அதிகப்பட்டிருக்கின்றது. இம்வாறு அதிகப்பட்டது சாகுபடி காலத்தில் வெல்லத்திற்கிருந்த அதிக விலையேயென்று சொல்லப்படுகின்றது.